# திறவுகோல்

2053 ஆனி

மாத இதழ்



**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# ஆபிரகாம்லிங்கன்

## (அழக்கூடாது என்பதற்காக சிரித்த மனிதன்)

உலகில் பலசாலி என்றால் ஆறடி உயரமும் கட்டுமஸ்தான உடலைப் பெற்றிருப்பவரைக் குறிக்கும். உலகை வென்ற அலெக்ஸாண்டரின் உயரம் ஐந்தடிதான். உலகில் வல்லரசு நாடென்றால் எதைக் குறிக்கிறது பலமான சக்திவாய்ந்த ராணுவ பலத்தைக் கொண்ட நாட்டைக் குறிக்கிறது. 90க்கு முன் உலகில் இருபெரும் வல்லரசுகள் இருந்தன. ஒன்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றொன்று சோவியத் யூனியன். அமெரிக்கா ஜனநாயகப் பாதையில் சென்றது. சோவியத் யூனியன் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கம்யூனிசயத்தை நம்பியது. இரண்டாம் உலகப் போருக்கு பின்புதான் அமெரிக்காவும் ரஷ்யாவும் இருபெரும் துருவங்களாயின. போரில் அணுஆயுதத்தைப் பயன்படுத்திய ஒரேநாடு அமெரிக்காதான். அதன் பிறகு உலக நாடுகள் தங்கள் பாதுகாப்பிற்காக அணுஆயுத பலத்தைப் பெரும் முயற்சியில் ஈடுபட்டன. இந்தியா உட்பட பல நாடுகள் அணுஆயுத நாடுகளாயின. இந்த அணுஆயுத பலம் பொருளாதார போருக்கு வழிவகுத்தது. பகைநாடுகள் எதிரிநாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டன. 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின் ரஷ்யா அடிபட்ட பாம்பாக இன்று படமெடுக்கிறது. இருபெரும் வல்லரசுள் தங்கள் ராணுவ வல்லமையைக் கொண்டு மூன்றாவதாக ஒரு நாட்டில் மோதிக் கொள்கின்றன. உக்ரைன், தைவான் பிரச்சனைகள் உலகை அழிவுப் பாதைக்கே அழைத்துச் செல்லும்.

உலக நாடுகளில் பெரியண்ணனாக தன்னைக் காட்டிக் கொள்கிறது அமெரிக்கா. நேட்டோ எனப்படுத் ராணுவக் கூட்டணி மூலம் தன் எதிராளிக்கு செக் வைக்கிறது. தட்டிக் கேட்க வேண்டிய ஐ.நா அமெரிக்கத் தூதரகத்தின் தலைமையிடமாகச் செயல்படுகிறது. அமெரிக்கா குடியேறிகளின் நாடு. அந்நாட்டுக்கென்று தொன்றுதொட்ட வரலாறு கிடையாது. நாகரிகமும் பண்பாடும் சிதைந்த ஒழுங்கற்ற வாழ்க்கை முறை அமிெக்கர்களுடையது. இவ்வுலகில் தன்னலமற்ற தலைவர்கள் தோட்டாக்களையே பரிசாகப் பெற்றனர். உலகின் ஒரே வல்லரசு எனத் தன்னைத் தானே பறைசாற்றிக் கொள்ளும் அமெரிக்கா மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தது. அமெரிக்கா தனது ஆயுதளவாடங்களை விற்கும் சந்தையாகத்தான் உலக நாடுகளைக் கருதுகிறது. உலகில் அமைதியற்ற  சூழல் நிலவுவதற்கு மூல காரணம் அமெரிக்காதான். மல்யுத்த  ரிங்போல இருநாடுகளை மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் குரூர குணம் கொண்டவர்கள் அமெரிக்கர்கள். தனது எதிரி நாடுகளை பயமுறுத்த, தனது ராணுவ பலத்தைக் காட்ட அந்நாடுகளின் எல்லையில் ராணுவ ஒத்திகை நடத்துகிறது. நேட்டோ என்பது நவீன ஏகாதிபத்தியமே அன்றி வேறில்லை.

*இத்தகைய அரக்கத்தனமான அமெரிக்காவிலிருந்து நீர்மட்டத்தைவிட உயரும் நீர்ப்பூ மாதிரி உதித்தவர்தான் ஆபிரகாம்லிங்கன். விதை முளைவிட மண்ணைப் பிளந்துதானே ஆகவேண்டும். இறைச் செய்தியை மக்களிடையே இறக்கியருள வரும் இறைத்தூதர்களை விட அமெரிக்க நாட்டின் அதிபருக்கே அதிக அதிகாரம் இருக்கிறது. மதரீதியாகப் பார்த்தால் இயேசுவைக் கொன்ற யூதர்களை(இஸ்ரேலியர்கள்) அமெரிக்கா ஆதரிக்கக் கூடாது.சதுரங்க ஆட்டத்தில் எதிரிக்கு எதிரி நண்பன். தேசமென்றால் மரமும், மலையும், கடலும், நதியும் அல்ல தேசமென்றால் மக்கள், அந்த மக்களிடையே தான் எத்தனை ஏற்றத்தாழ்வுகள். மதத்தால், நிறத்ததால், மொழியால் நீ தாழ்ந்தவன் என்பது எவ்வளவு பெரிய கொடூர குணம். ஆபிரகாம்லிங்கனின் தந்தை தாமஸ் சாதாரண தச்சன் அதாவது செருப்பு தைக்கும் தொழிலாளி. லிங்கனுக்கு ஒன்பது வயதானபோது தாய் நான்சி இறந்துவிட தாமஸ் சாரா என்கிற விதவையை மணந்துகொண்டார். ஏழைக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் வாசிப்பின் மீது லிங்கனுக்கு தீராத ஆர்வம் இருந்தது. படிப்பு என்பது லிங்கனுக்கு சுமையாக இல்லை. தாமஸ் குடும்பம் 1830ல் இல்லினாய்ஸுக்கு குடியேறிய போது லிங்கனுக்கு வயது பதினைந்து. அவன் நியூ ஆர்லியன்ஸ் வசித்தபோது ஆப்பிரிக்காவிலிருந்து அழைத்து வரப்பட்ட கறுப்பினத்தவர்களை அடிமைகள் என்ற பெயரில் விலைக்கு விற்கப்படுவதையும், இரும்புக் கம்பிகளால் அவர்களுடைய கைகால்கள் கட்டப்பட்டிருப்பதையும், சாட்டையால் அடித்து துன்புறுத்தப்படுவதையும், உணவு கொடுக்காது கொடுமைப்படுத்தப்படுவதையும் கண்டார். அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டும் என்ற விதை அப்போதுதான் அவரது மனதில் விழுந்தது.*

*தனக்கென்று கொள்கையுள்ள ஒருவனால் தான் தலைவனாக முடியும். அவனது சொற்கள் ஆயிரம் அணுகுண்டுகளுக்கு சமம். லிங்கனுக்கு அமெரிக்காவில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. லிங்கன் பொதுவாழ்விலும், மணவாழ்விலும் கடும் சோதனைகளை எதிர்கொண்டவர். காதலித்த பெண்ணை மணந்து கொண்டாலும் மணவாழ்வு இரண்டு ஆண்டுகளே நீடித்தது. அப்பெண் விஷக்காய்ச்சலால் மரணமடைந்தாள். லிங்கள் தனது 33வது வயதில் மேரிடோட் என்ற பெண்ணை மறுமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு பிறந்த நான்கு குழந்தைகளில் மூன்று பேர் சிறுவயதிலேயே மரணத்தைத் தழுவினார்கள். லிங்கனின் மனைவி டோட் மனநோயால் பாதிக்கப்பட்டார். வாழ்க்கை லிங்கனை மண்புழுவாய் நசுக்கியது. எத்தனை முறை லிங்கன் கால்இடறி விழும்போதும் மண்முத்தமிட்டுச் சொன்னது முயற்சி செய்து இத்தனை முறை எழுந்தவன் அல்லவா நீ என்று. லிங்கனின் மனம் எஃகு கோட்டை அவ்வளவு சீக்கிரத்தில் அதை தகர்த்துவிட முடியாது. தீராத பிரச்சனைகளுக்கு முடிவு கட்ட காலம் சரியானவரைத்தான் தேர்ந்தெடுத்து இருந்தது.*

சட்டம் பயின்று வழக்கறிஞர் ஆனாலும். 1831 முதல் 1858 வரை தான் எடுத்த முயற்சிகள் அனைத்திலும் தோல்விகண்டார் லிங்கன். வெற்றியையும் தோல்வியையும் சமமாகப் பார்க்க பழகிக்கொண்டார். அதுதான் அவருக்கு ஆன்மபலத்தைத் தந்தது. முதன் முதலாகத் தேர்தலை சந்தித்து தோல்வியடைந்த நேரத்தில் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார் லிங்கன். கூட்டம் முடிந்ததும் உங்களில் சொர்க்கத்திற்கு செல்ல விரும்புவர்கள் மட்டும் கையை உயர்த்துங்கள் என்றார் பாதிரியார். எல்லோரும் கையைத் தூக்க ஆபிரகாம்லிங்கன் மட்டும் பேசாமல் நின்றார். ஆபிரகாம்! நீ எங்கே போவதாக உத்தேசம்? என பாதிரியார் கேட்க, தோல்வி அடைந்திருந்த அந்த மனநிலையிலும் நான் செனட் உறுப்பினராகப் போகிறேன் என்று உறுதியான குரலில் சொன்னார். நீ எதுவாக மாற விரும்புகிறாயோ, அதுவாக மாறுவாய் என புன்னகையுடன் ஆசி வழங்கினார் பாதிரியார்.

1859ம் ஆண்டு லிங்கனின் நெருங்கிய நண்பர் அவரிடம் நீங்கள் ஏன் அதிபராகக் கூடாது எனறு கேட்டபோது லிங்கன் பணிவுடன் என் உயரம் எனக்குத் தெரியும் என்றார். அடுத்த ஆண்டே அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று விழுந்த விதை லிங்கனின் மனதில் இன்று  விருட்சமாக விஸ்வரூபம் எடுத்திருந்தது. லிங்கனுக்கு தெரிந்திருந்தது தான் விளையாட நினைப்பது பாம்பிடம் என்று. பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் அதாவது 1862ல் அவர் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து அனைத்து அடிமைகளும் விடுவிக்கப்படுவர், அதன் பின் அமெரிக்காவில் அடிமைத்தனம் இருக்கக் கூடாது என்று பிரகடனம் செய்தார். அமெரிக்காவில் தென்மாநிலங்கள் விவசாயத்தை பெரிதும் நம்பி இருந்ததால் லிங்கனின் முடிவை ஏற்றுக் கொள்ள மறுத்தன. தொழிற்சாலைகள் மிகுந்த வடமாநிலங்கள் லிங்கனின் முடிவை ஏற்றன. தென் மாநிலங்களை கட்டுக்குள் கொண்டு வர போர் அவசியம் என லிங்கன் உணர்ந்தார். நான்கு ஆண்டுகாலம் நடந்த உள்நாட்டுப் போரில் தென் மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டன. லிங்கனின் அநீதிக்கு எதிரான போராட்டத்துக்கு வெற்றி கிடைத்தது.

ஒருவன் செய்யும் காரியங்களே அவன் உயர்வு தாழ்வை நிர்ணயிக்கின்றனவே தவிர நிறமல்ல. பிறப்பால் உயர்ந்தவன் என யாரும் இங்கே மார்தட்டிக் கொள்ள முடியாது. வாழ்வு மிகவும் குறுகியது. அன்பு என்பது தெய்வ குணம் அதைத்தான் மற்ற மனிதர்களிடம் நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். பைபிளில் சுவர்க்கம், நரகம் என வாசித்துவிட்டு அதற்கு நேர்எதிரான காரியங்களில் ஈடுபடலாமா? கடவுள் கறுப்பும் கிடையாது வெள்ளையும் கிடையாது கடவுள் கடவுள் தான் நீங்கள் செய்யும் பாபகாரியங்களுக்கு அவரை துணை சேர்க்காதீர்கள். நீங்கள் நான் எல்லோரும் கடவுளின் குழந்தைகள். கறுப்பு நிறத்தவர்கள் என்பதால் கடவுள் தன் மைந்தர்களையே வெறுத்து ஒதுக்குவாரா என்ன? பூமி எல்லோருக்கும் உரியது. உங்கள் சொகுசு வாழ்க்கைக்காக அவர்கள் மாடாய் உழைக்க வேண்டுமா? கடவுள் உழைப்பவரைத்தான் விரும்புவாரே தவிர சும்மா இருப்பவரை அல்ல. பைபிளில் ஒரு வாசகம் இருக்கிறது  தன்னைத் தானே தாழ்த்திக் கொள்கிறவன்

உயர்த்தப்படுவான் என்று. கடவுள் உங்கள் மீது கருணை காட்ட வேண்டுமென்றால் நீங்கள் உங்களின் கீழானவர்கள் மீது கருணை காட்டுங்கள். கடவுள் நீங்கள் செய்த பாபத்தை மன்னிக்க வேண்டுமென்றால் நீங்கள் உங்களின் கீழானவர்கள் செய்த பாபத்தை முதலில் மன்னியுங்கள்.

கடவுளுக்கு முன் எல்லோரும் சமம். அமெரிக்காவை பழமைவாதிகளிடமிருந்து மீட்கவே இந்தப் போர் நடத்தப்படுகிறது. மக்களுக்காக அரசாங்கம், மக்களுடைய அரசாங்கம், மக்களால் ஆளப்படும் அரசாங்கம் என்னும் வாக்கு மொழிகள் இந்த பூதளத்திலிருந்து அழிந்து போகா. 1863ல் லிங்கன் ஆற்றிய கெட்டிஸ்பர்க் பேருரை இது. இவ்வுரை தான் லிங்கனுக்கு இரண்டாவது முறையாக ஜனாதிபதியாகும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. தென்பகுதி வடபகுதி ராணுவதளபதியிடம் சரணடைந்தது. 1865ம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று புனித வெள்ளி. லிங்கன் தனது மனைவியுடன் அவர் அமெரிக்கன் கஸின் என்ற நாடகம் பார்க்க அரங்குக்குச் சென்றிருந்தார். கறுப்பினத்தவர்களும் வெள்ளையினத்தவர்களும் சமமானவர்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாத பழைமைவாத சிந்தனையில் தோய்ந்து போயிருந்த நாடக நடிகன் ஜான் வில்கஸ் பூத் என்ற தேசத்துரோகி லிங்கனை சுட்டுக் கொன்றான். இன்று ஒரு கறுப்பினத்தவர் அமெரிக்கா ஜனாதிபதியாகி வெள்ளை மாளிகைக்கு செல்ல முடிகிறதென்றால் அதற்கு மூலகாரணம் ஆபிரகாம்லிங்கன் தான். நீக்ரோ என்ற சொல்லே வழக்கொழிந்து போனதற்கு நம் சமூகம் லிங்கனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

லிங்கன் ஒருமுறை ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது அவரை அவமானப்படுத்த எண்ணிய ஒருவர், மிஸ்டர். லிங்கன் அவர்களே ... உங்களைப் பற்றி மிகவும் பெருமையாக நினைத்துக் கொள்ள வேண்டாம். உங்கள் அப்பா தைத்த செருப்பைத்தான் நான் அணிந்து கொண்டிருக்கிறேன் என்று உரத்த குரலில் கூறினார். லிங்கன் அவமானத்தால் நொறுங்கிப் போய்விடுவார் என்பது அவர் எண்ணம். வர்ணாசிரம தர்மத்தில் நீ சூத்திரன் அதனால் தாழ்ந்தவன் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறதில்லையா? ஆனால் ஆபிரகாம்லிங்கன் சிறிது கூடக் கோபமில்லாமல், நண்பரே உங்களுக்கு நன்றி. இன்னும் நீங்கள் என் தந்தை தைத்த செருப்பை அணிந்து கொண்டு இருக்கிறீர்கள் என்றால் என் தந்தையின் தொழில் நேர்த்தி எவ்வளவு என்பது எனக்குப் புரிகிறது ஒரு வேளை அந்தச் செருப்பு பழுதாகிப் போனால் ஜனாதிபதி மாளிகைக்கு தயங்காமல் கொண்டு வாருங்கள். நான் சரியாகத் தைத்துத் தருகிறேன் என்று பதிலளித்தார். ஒரு மனிதனின் உயர்வைத் தீர்மானிப்பது அவன் உழைப்புதானே தவிர அவனுடைய பின்புலம் அல்ல. ஒரு அரசியல் தலைவன் அதிகார பொறுப்பிற்கு வந்ததும் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்ற முயல்கிறான் என்றால் அவன்தான் உண்மையான புரட்சியாளன். இந்த உலகம் ஒரு புரட்சியாளனை அதிகாரத்துக்கு வராமல் தடுக்கும். புரட்சி என்பதே அடித்தட்டு மக்களின் வேதமாகும். கார்ப்பரேட் கம்பெனிகளிடமிருந்து

மக்களை மீட்க இன்னொரு லிங்கனும், சேகுவேராவும் பிறந்து வரவேண்டும். தவறு செய்தது கடவுளாக இருந்தாலும் சாட்சிக் கூண்டில் ஏற்ற வேண்டும் என்ற சாக்ரடீஸின் வாககம் எக்காலத்துக்கும் பொருந்தும்.



ப.மதியழகன்,
115,வள்ளலார் சாலை,
ஆர்.பி.சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம்.
கைப்பேசி: 9597332952
பகிரி: 9384251845

---

# தாய்மை

மடிச்சுமந்த தாய்மையிங்கு
கல்சுமந்து தேயுதடா!

வலுவிழந்த மேனியிலே
பாரம் சுமந்து நோகுதடா!

ஈன்றவனை சான்றோனாக்க
படியேறிப் பார்க்குதடா!

தன் மகனை வளர்ப்பதற்கே
தெய்வம் ஒன்று சாகுதடா!

புத்தாடை அவனுடுத்த
கந்தலாடைக் கிழியுதடா!

கனவுலகில் அவன் மிதக்க
அவளுறக்கம் தொலையுதடா!

பாசம் காட்டி பசியாற்ற
ஈடுயிணை யாரடா?

குலம் காக்கும் குலச்சாமி
அவள் என்று கூறடா!

பொதிச்சுமக்கும் காளையுமே
ஓய்வெடுக்கும் பாரடா!

ஓய்வறியா உழைப்பிற்கு
தாய்மை என்று பேரடா!

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
6380704001.



# கனவுகள் நீண்டு காட்சிகள் மாற

உறக்கம் கலைந்த பிற்பாடு
வருகிறாளவள்.
/
கிளை உச்சியிலிருந்து
பிடிதவறி எறும்புக்கு
சருகும் காற்றும் துணை.
/
தனித்துக் கரையொதுங்கிய
நண்டுக்கு மரணத்தைத் தவிர்த்து
ஏதேனுமொன்றைத் தந்தாக
வேண்டும் மண்.
/
சபித்தலின் மையத்தில்
துயரங்கள் இருப்பின்
நியாயமாய் அவனுக்கு
வரங்களை அருளிடு.
/
எந்த வரிசைப்படி
காய்கள் நகர்த்த வேண்டுமென;
முன்னெச்சரிக்கையுடன்
குறிப்பெடுத்துக் கொண்டாலும்;
நடைமுறையில் தாறுமாறாகவே
நிகழ்ந்து முடிகிறது.
/
துயரத்தின்
அவஸ்தையினூடே சிரிக்கும்
அவனுக்கு குழந்தை மனசு.
/
தாகம் தீர்த்த
நதியின் முகத்தில்
பெருத்த கவலை.
/
மண்ணில் எச்சமிட்ட பறவை
ஒரு பெருவனத்தை
மொத்தமாய் கொட்டிப்போனது.
/
தன்னுரிமையில் நியாயம்
கோருபவனை துரோகியெனச்
சொல்லும் இவ்வுலகம்.
/
பூக்களின் மேலுள்ள
பனித்துளியைத் தேனென்று
ஏமாறுவதில்லை ஈக்கள்.
/
உன் தவறினை
நியாயப்படுத்துகிறாயெனில்
தர்மம் தவறியவன் நீ.
/
முகவரியற்ற காற்று
மூச்சுப்பைக்குள்
சில வினாடி சிறைவாசம்
சகலஜீவராசிகளுக்கும்
உயிர்ப்பிச்சை.
/
கழித்தலிலும் காலத்தை
மிச்சம் வைத்தே
கழிகிறது காலம்.
/
ஒரு பருக்கை
எறும்புக்கு
எட்டு வேளைத்தீனி.
உன்-
ஒரு வேளைச்சோறு
யானைக்கு
ஒரு வாய்க் கவளம்.
/
உன்னை
இதயத்தில் வைத்திருப்பதை
உன்னிடம் திறந்து காட்ட
ஆசைதான்.
பாழாய்ப் போன இதயம்

இயங்காமல் நின்றுவிடுமே
அதற்காகத்தான்
அஞ்சுகிறேன்...!
/
உழைக்கத்
தயாராக இல்லை.
ஊதியத்தை மட்டும்
எதிர்ப்பார்க்கிறது
பல மனங்கள்.
/
கேள்விகளோடு
தொடங்கப் படுகிறது
வாழ்க்கை.
பதில்
கிடைக்கப் பெற்றும்
கிடைக்கப் பெறாமலும்
முடிந்தும்
முடிவுறாமலும்
போக்கற்றுப் போவதையே
அது
வழக்கமாகக்
கொண்டிருக்கிறது.

—



பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353

---

# 01. பேராசான் புத்தன்...!!!

தன் ஆசைகளை துறந்து
போதிமரங்கள் தான் தன் வீடென
கூறிக் கொண்டிருந்த
புத்தனின் சிலையை செதுக்க
ஆரம்பிக்கும் சிற்பியின்
கைகளில் முளைக்க ஆரம்பிக்கிறது
உலகத்திற்கான ஞானம்,

02. அம்மாவுக்கும்
மகனுக்குமான உறவு ...!!!!

கருவறையின்
முதல் பந்தலில்
ஆரம்பிக்கப்பட்ட உனக்கும் எனக்குமாக
தொப்புள் கொடி முடிச்சி கல்லறையின்
கடைசி பந்தலில்
அவிழப்படுகிறது
மரணமெனும் உயிர் புரிதலில்,

03. பறவையின் நோக்கம்...!!!!!
அவைகள்
சிறிய பறவையே
பெரிய பறவையே
அவைகள் எல்லாம்
பறவைகளாக ஆனதே
வானத்தில் பறப்பதற்கு தானே,

04. மழை.....!!!!
நீ கைநீட்டிய பிறகு தான்
அம்மழையும் மண்ணுக்கு உரமாகிறது
அதில் நான் சிறு பூவாக பூக்கும்
துளிராகிறேன்,

05. மரம் வளர்ப்போம்....!!!!!!
வெட்டப்பட்ட மரத்துக்காக
கவிதை ஒன்றை எழுத முற்படும்
பொழுதெல்லாம் காகிதமும்
கண்ணீர் விட்டு அழுகிறது

நீ என்
உயிரில் தான்
கவிதை வடிக்கிறாய்யென்று,

—

கவிஞர் ச.சக்தி,
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி, 9791642986.

---

# துளிப்பாக்கள்

அசைவில்லாத நீர்நிலை
தவளை குதித்ததும்
மரங்கள் அசைகின்றன

குழந்தையின் தனிமை
ஆனந்தமாக ஆக்கிவிட்டது
வட்டமடிக்குமொரு தும்பி

பறவைக் கூட்டம் போல்
ஒன்றிணைந்த சிறுவர்கள்
முன்னால் பறக்கும் தும்பி

கொட்டியிருக்கும் பணம் நகைகள்
தாண்டி கூட்டம் செல்கிறது
இனிப்பைத் தேடி எறும்புகள்

உணவின்றி படுத்திருக்கும் தெருநாய்
புத்துணர்வோடு ஓடி குரைக்கிறது
தெருவில் புதியவன் வருகை

## 02. சுருங்கிக் கிடக்கும் வானம்

ஆற்று மணலைத்
திருடி விட்டு
மனித உயிர்களால்
மேடாக்கப் பார்க்கிறார்கள்

இலவச அரிசி
தருகிறோமென்று
வாய்க்கரிசியிட
வாயில் மணலை
நிரப்புகிறார்கள்

கால்களை இழுத்து
மூச்சைப் பறிக்கும்
ஆற்றின் குட்டைகளில்
சுருங்கிக் கிடக்கிறது
வானம்!
மனித மனம் போல!

ஆசை ஆசையாய்
குடிக்கச் செல்கிறோம்
இந்த ஆறோ!
ஆசை கொள்கிறது
வரிசையாக
மனித உயிர்களைக் குடிக்க!

நீரில் மூழ்கி
மிதந்த உடல்
கரையில் கிடக்கிறது
நெருப்பில் வேக!

மணலைத் திருடி
கடந்து செல்லும்
வண்டிச் சக்கரங்களில்
ஒட்டிக் கொள்ளும்

தூசிகளில் தெரிவதில்லை
இது நீரில் மூழ்கி
இறந்து போன
மனிதர்களின் சாம்பலென்று!

தசைகளைத் திருடி விட்டு
எலும்பாகக் கிடக்கும்
ஆற்றின் கரையில்
எதைக் கரைக்க
செல்கிறான் மனிதன்?

துண்டு துண்டாக
உடலை வெட்டி
ஆற்றில் வீச்சு என
வாசிக்கையில்...
ஆறு கேட்கிறது
தன்னை
துண்டு போட்ட செய்தி
எப்போது வருமென்று!

—



சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
9944315732

---

# ஓர் இரவு

நீலவண்ண சாளர மின்னல்கள்
இழுத்து வந்த இடிகளுடன்
மேலெழும்புகிற மண்வாசனைக்குள்...

பவ்யமாய் கதை பேசி
கதவடைத்துறங்கும் வேளையில்
எட்டிப் பார்க்கும் இவ்வரிகளுக்கான
ஒரு சிற்றிடைவெளியாய் கைப்பேசியும்...

ஒவ்வொருவர் கதைகளுக்குள்
கலந்து போன மெழுகுதிரி
விடுதி அறையில் இன்னும்
உருகிக் கொண்டிருக்கிறது,...
எங்களுடன் சேர்த்து !!!

- "ஓர் இரவு"...

—

கவிமலர் த.சரண்யா,
கோவை.



# பட்டினப்பாலை காட்டும் பரதவர் வாழ்வும், காவிரி சங்கமுகச் சிறப்பும்...



தமிழர் வாழ்வியல் ஆவணமாக நிலைத்து நிற்கும் 'வஞ்சிநெடும் பாட்டு' என தமிழ் விடு தூது குறிப்பிடும் பட்டினப்பாலையை தொடர்ந்து பருகி வருகிறோம்.

கடந்த இதழுக்கு அனுப்பிவிட்டேன் என நினைத்து தவறவிட்டு விட்டேன். மன்னிக்கவும்.

பிற்காலப் பாண்டிய மன்னன் ஒருவன் சோழநாட்டை வென்று அதன் தலைநகரை அழித்தபோது, அந்நகரில் பட்டினப்பாலை அரங்கேற்றப்பட்ட பதினாறு கால் மண்டபத்தை அழிக்காதிருக்க ஆணையிட்டான் என திருவெள்ளரைக் கல்வெட்டு கூறுகிறது என்றால் பட்டினப்பாலையின் பெருமையை உணரலாம்.

சரி முந்தைய இதழில் செம்படவர் குடியிருப்பை பார்த்து, செம்படவர் விளையாட்டுக்களை இரசித்து கல் காயம்பட்ட பனைமரங்களை தரிசித்து, அதை தாண்டி புறஞ்சேரி வரை பார்த்தோம்.

இந்தவாரம் காவிரித்தாய் கடலில் சங்கமிக்கும் காவிரி பெருந்துறையின் பெருஞ்சிறப்பையும், அங்கே வசிக்கும் மீன்பிடித் தொழில் செய்யும் பரதவர்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் வழிபாடு மற்றும் விளையாட்டுகளையும் காணலாம் வாருங்கள்.

கிடுகு நிரைத்து, எஃகு ஊன்றி,
நடுகல்லின் அரண் போல,
நெடும் தூண்டிலில் காழ்
சேர்த்திய குறுங்கூரைக் குடி நாப்பண்,
நிலவு அடைந்த இருள் போல,
வலை உணங்கும் மணல் முன்றில் (78-83)

இன்றும் குலதெய்வம் என நடு கல்லை வணங்கும் மரபு உள்ளது. சமீபத்தில் வெளிவந்த 'விவசாயி' திரைப்படத்தில் இதனை காட்டியிருப்பார்கள். மாவீரர் துயிலும் இல்லங்களும் இதற்க்கு சிறந்த சான்று.

இறந்த வீரர்களின் நினைவாக நடுகல் நாட்டுவதும் நடப்பட்டிருக்கும் நடுகற்களுக்கு கேடயங்களை வரிசையாக வைத்து வேலை ஊன்றி அரண் போல அமைப்பதும் தமிழர்

மரபு என்பதனை காண்க.

அதனையொத்த நீண்ட மீன் தூண்டில் கோலினைச் சார்த்தி அமைக்கப்பட்டிருக்கும் குறுகிய கூரையினையுடைய குடிசை பரதவர் குடியிருப்பில் காணப்பட்டது . இதன் நிலவின் நடுவில் சேர்ந்திருக்கும் இருளைப் போல, மீன் பிடிக்கும் வலை உலர்ந்து கொண்டிருக்கும் வெள்ளிய மணல் நிறைந்த முற்றத்தினையும் உடையது பரதவரின் இருப்பிடம் என்பதனை மேற்கண்ட பட்டினப்பாலை வரிகள் படம்பிடித்து காட்டுகிறது.

வீழ்த் தாழைத் தாள் தாழ்ந்த
வெண் கூதாளத்துத் தண் பூங்கோதையர்,
சினைச் சுறவின் கோடு நட்டு
மனை சேர்த்திய வல் அணங்கினால்,
மடல் தாழை மலர் மலைந்தும்,
பிணர்ப் பெண்ணைப் பிழி மாந்தியும்,
புன்தலை இரும் பரதவர்
பைந்தழை மா மகளிரொடு
பாய் இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது,
உவவு மடிந்து உண்டு ஆடியும் (84-93)

இலக்கியங்களில் நெய்தல் திணைக்குரிய மரமாகப் போற்றப்படுவது தாழை. பரதவர், விழுதினையுடைய தாழையின் தாள்களின் அடிப்பகுதியில் வளர்ந்திருக்கும் வெண்டாளியின் குளிர்ச்சியான மலர்களால் கட்டப்பட்ட மாலையினை அணிந்திருந்தனர்.

சதைப்பற்றுடன் சுனைமுள் கொண்ட இலைகளைத் 'தாளி' என்றனர். இந்தச் செடியில் வெண்மையான பூக்கள் பூப்பதால் இதனை வெண்டாளி என்றனர்.

சினையான சுறாமீனின் கொம்பினை நட்டு, அதில் தம் நிலத்து தெய்வமாகிய வருணனைத் தங்கச்செய்து, அத்தெய்வத்திற்குப் படைத்த மடலோடு கூடிய தாழை மலரைத் தாம் சூடினர்.

சொர சொரப்பான பனை மரத்திலிருந்து இறக்கிய கள்ளைப் பருகினர். எண்ணெய் தடவாத தலைமயிரும், கரிய நிறமுமுடைய பரதவர், முழு நிலா நாளில் ஊக்கம் குறைந்து, கருமையான குளிர்ந்த கடலில் மீன் வேட்டைக்குச் செல்லாமல், பசுமையான தழை ஆடையினை உடுத்த தம் பெண்களோடு தாம் விரும்பும் உணவினை உண்டு விளையாடினர்.

ஏன் பரதவர் மீன் பிடிக்க செல்லாமல் இவ்வாறு களிப்புற்று கிடந்தனர் என

தோன்றியபோது பின்வரும் விடயம் நினைவில் வந்தது. ஒவ்வொரு வருடமும் மீன்களின் இனப்பெருக்க காலமான ஏப்ரல் 15-ந்தேதி முதல் ஜூன் 14-ந்தேதி வரை 60 நாட்களுக்கு கடலில் சென்று மீன்பிடிக்க தடை விதிக்கப்படும். இந்த காலத்தில் மீன்கள் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் என்பதால் மீன்வளத்தை பாதுகாக்க இந்த சட்டம் உலங்கெங்கிலும் இன்றைய காலகட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இயற்கையோடு இயைந்த வாழ்வியலை கொண்ட தமிழர்கள் இதனால் தான் மீன் பிடிக்க செல்லாமல் வளம்பொருந்திய பூம்புகார் பட்டினத்தில் விடுமுறை நாட்களை போல களிப்புடன் இருக்கின்றனர். சரி வாருங்கள் காவிரித்தாய் கடலில் கலக்கும் சங்கமுகம் பற்றி பட்டினப்பாலை கூறும் அழகை இரசிக்கலாம்

புலவு மணல் பூங்கானல்
மா மலை அணைந்த கொண்மூ போலவும், 95
தாய் முலை தழுவிய குழவி போலவும்,
தேறு நீர்ப் புணரியோடு யாறு தலைமணக்கும்
மலி ஓதத்து ஒலி கூடல்
தீது நீங்க கடலால் ஆடியும்,
மாசு போக புனல் படிந்தும், 100
அலவன் ஆட்டியும் உரவுத் திரை உழக்கியும்,
பாவை சூழ்ந்தும், பல் பொறி மருண்டும்,
அகலாக் காதலொடு பகல் விளையாடிப்
பெறற்கு அரும் தொல் சீர்த் துறக்கம் ஏய்க்கும்,
பொய்யா மரபின் பூ மலி பெருந்துறை (94-105)

மீன்பிடி தொழில் நடக்கும் , மீன் வலைகள் காய்ந்து கொண்டிருக்கும் மீன் புலால் நாற்றமுடைய மணலை உடைய, மலர்களைக் கொண்ட சோலைகளையுடைய கடற்கரையில், பெரியமலையை அணைத்த முகிலைப் போலவும், தாயின் முலையைத் தழுவிய பால் சுவைக்கும் குழந்தையைப் போலவும், தெளிந்தகடல் நீருடன் காவிரி ஆறு கலக்கும் மிக்க அலைகளின் ஒலியையுடையதை புகார்முகம் விளங்கிற்று.

அச்சங்கமுகத்திலே தீமை நீங்க கடலில் விளையாடியும், கடலில் விளையாடியதால் உடலில் பட்ட உப்பை நீக்க ஆற்று நீரில் குளித்தும், நண்டுகளை விரட்டி விளையாடியும், வலிமையான அலைகளில் விளையாடியும், மணல் பொம்மைகளைச் செய்தும், ஐம்பொறிகளை நுகர்ந்தும், நீங்காத விருப்பத்துடன் பகல் முழுக்க விளையாடினார்கள் மக்கள்.

அவர்களுடையமகிழ்ச்சி, பெறுவதற்கு அரிய தொன்மையான சிறப்பையுடைய மேல்

உலகத்தில் உள்ள மகிழ்ச்சியைப்போன்றது. 'வான் பொய்யினும் தான் பொய்யா, மலைத்தலை இய கடற்காவிரி' காவிரியின் மலர்கள் நிறைந்த பெரிய துறை, பொய்த்தல் இல்லாத மரபையுடையதாக இருந்தது.

நீண்ட பெருந்தொற்று காலத்திற்கு பிறகு இன்று பெரும்பாலோனோர் வெளிக்கிளம்பி இயற்கையான இடங்களுக்கு சுற்றுலா செல்ல வேண்டுமென விரும்புகிறோம். சுற்றுலாதளம் அழகும் வளமையும் , செழிப்பும் நிறைந்ததாக சொர்க்கம் போல இருக்கும். அத்தகைய சொர்க்கபூமியாக தான் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியதைப் பட்டினப்பாலைப் படம்பிடித்து காட்டுகிறது.

தொடர்ந்து ஆதரவு தரும் வாசகர்களுக்கும், தமிழ் உறவுகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

— இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.

---

## என்னை

உனக்கு பிடிக்காமல் போகட்டுமென
வரம் கேட்கிறேன் ...
உன் அன்பால்
நான் நீயாக
வாழவேண்டியதாகயிருக்கிறது...
ஒவ்வொரு இடங்களிலும் !
***

உறவுக்காரனை விட
மிட்டாய்காரனை
அதிகம் பிடித்துவிடுகிறது...
குழந்தைகளுக்கு!
***

ரசிக்காமல்
உறங்கச்சென்ற இரவெல்லாம்
என்ன நினைத்திருக்குமென்ற
எண்ணமே
உறங்கவிடாமல் வைத்திருக்கிறது...
என்னை,
அந்த நிலவைப் போலவே!
**

வெற்றியை
விரும்பவில்லை...
எதிராளியின் கண்களில்
பெருமழை!
***

குழந்தைகளிடம்
நட்பை ஏற்படுத்தித்தருகிறது...
சில்லரைக்கு பதிலாக
கிடைக்கும் மிட்டாய்கள்!

—

அ.பர்கானாஅக்கிம்,
சிவதாபுரம்,
சேலம்.



## மானிடச் சிறப்பு

அழகு அழகு பேரழகு..
மானிடப் பிறப்பே
பேரழகு..

அமுது அமுது தேனமுது..
மனிதனின் குணமே தேனமுது..

சிறப்பு சிறப்பு மிகச்சிறப்பு..
மனிதனின் வாழ்க்கை மிகச்சிறப்பு..

அறிவு அறிவு பேறறிவு..
மனிதனின் மூளை பேறறிவு..

ஆற்றல் ஆற்றல் பேராற்றல்..
மனிதனின் சிந்தனை பேராற்றல்..

சிரிப்பு சிரிப்பு பொன்சிரிப்பு..
புன்னகையில் அகிலமே அபகரிப்பு..

மனிதா மனிதா நீ நினைத்தால்..
மனிதம் மனதில் நீ நிலைத்தால்..

அகிலம் உனக்கு வசமாகும்..
அனைத்தும் உனக்கே உறவாகும்..

## வள்ளுவம் காட்டும் வாழ்க்கை நெறிகள்

வள்ளுவம் வழியில் வாழ்க்கை
அமைந்தால்...
நித்தமும் வாழ்வில் வெற்றியே
நிலைக்கும்...

அகிலத்தை அன்பால் ஆளுமை
கொள்வோம்...
உயிர்களை பண்பால் உயிராய்
காப்போம்...

நல்லோர் வாழ்க்கை அறமாய்
இருக்கும்...
அறத்தின் வழியில் வாழ்க்கை சிறக்கும்...

கற்றல் என்பது அறிவின் ஒளியே...
கல்லாமை என்பதை அறவே
ஒழிப்போம்...

முயற்சியை மனிதன் நாளும்
தொடர்ந்தால்...
பயிற்சியை நித்தம் செயலிலே
அமைத்தால்...

வாழ்க்கை என்பது வசந்தமாய் மாறும்...
வானவில் வந்து வாழ்த்துக்கள் பாடும்...

நேசம் என்பதை சுவாசமாய்
கொண்டால்...
வீசும் காற்றும் தென்றலாய் மாறும்...

நட்பு என்பது வாழ்க்கையில் வரமே...
சிறப்பாய் அமைந்தால் அனைத்தும்
சுகமே...

இல்லறம் என்பது நல்லறம் சிறக்க...
வள்ளுவம் வழியே தூய்மை என்பேன்...

— வாழ்வியல் கவி,
சா.நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

# தந்தையர் தினம்

*(ஜுன் 19)*

தெய்வத்தை பார்த்தது இல்லை
தந்தை மூலம் தெய்வம் பார்த்தேன்
காற்றை பார்த்தது இல்லை
தந்தை உயிரில் காற்றை உணர்ந்தேன்
உழைப்பை பார்த்தது இல்லை
அவர் வியர்வை பூத்த சட்டையில்
கண்டேன்
விடாமுயற்சி பார்த்தது இல்லை
கிழிந்த சட்டை செருப்பு தையலில்
சொன்னது
தன்னம்பிக்கை பார்த்தது இல்லை
அவர் மிதிவண்டி ஓட்டும் போது
கண்டது
பொறுமை பார்த்தது இல்லை
மாதம் முழுவதும் கஷ்டபட்டு சம்பளம்
வந்தது
கேள்வி கேட்க எனக்கு ஆசை
அவர் புன்னகை மாற்றிவிடும்
தெளிவான பதில் கண்ணை திறந்துவிடும்
கோபத்தில் எரிமலை
அன்பில் பனிமலை
கொடுப்பதில் பொன்மலை
கற்று கொண்டேன் பலகலை
அவர் பல்கலைக்கழகம்
என் புத்தகம் ஒருநாள் சம்பளம்
கல்வி கட்டணம்
ஒருமாதம் ஊதியம்
அன்பால் தரும் தேன் மிட்டாய் அவர்
மனம்
பாசமாய் வரும் குச்சி ஐஸ் அவர் குணம்
கோபத்தில் கண்டிப்பில் பலாப்பழம்
வெளியே குத்தும்
சுளை இனிக்கும்
குடிசை நிம்மதி தரும் மாளிகை
களியும் கூழும் அறுசுவை அமுதம்
பாராட்டும் வகையில் அன்பின்
அடையாளம்
வாழ்த்தும் குணத்தில் புதையல்
இருக்கும் போது அருமை புரியாது
மறைந்த போது கண்ணீர் நிற்காது
சொல்ல வார்த்தைகள் பத்தாது
கண்ணை விட்டு போனாலும்
என்னை விட்டு போகவில்லை
மண்ணை விட்டு மறைந்தாலும்
மனதை விட்டு மறையவில்லை

## உலக கடல் தினம்....

வாழ்க்கை எனும் பெருங்கடல்
துயரங்கள் சேர்த்து பெரும்புயல்
தீர்த்து வைக்கும் வேண்டுதல்
இறைவன் அருளால் ஆறுதல்

கடற்கரை ஓரம் தாலாட்டும்
தென்றல் மனதை களிப்பூட்டும்
அலைகள் காலை தழுவட்டும்
குழந்தையாக நினைவு மாறட்டும்

மணல் வீடுகள் காவியம்
காதலர் விரும்பும் வாழ்விடம்
உயிரியல் வாழ்க்கை ஆதாரம்
சூரிய வணக்கம் பாராட்டும்

காலை நேரத்தில் நடைபயிற்சி
நண்பர்களுடன் அரட்டை மலர்ச்சி
கவிதை கதை தரும் புரட்சி
வாழ்க்கை மாற்றம் வளர்ச்சி

சுண்டல் பஜ்ஜி விற்பனை
கவலைகள் தீர்க்கும் சிந்தனை

கடலரசனுக்கு மரியாதையோடு
வணக்கம்
இயற்கை பாதுகாப்பது இணக்கம்...

—

எஸ். வீ. ராகவன்,
சென்னை.

---

## கடவுளும் கணநேர பிழையும்...

கவலையுடன் எமதர்மன்
கடவுள் என்னவென்று வினவ...
விதவிதமான
நோய்களைப் பரப்பி
எண்ணிக்கையைக்
கட்டுப்படுத்த நினைத்தாலும்
அத்தனைக்கும் மருந்துகள் கண்டுபிடித்து
தலைவலி தருகின்றனர்
அற்பமாக நினைத்த மனிதர்கள்
படைப்பு நிரலில்
சிறுமாற்றம் செய்ய
அனுமதிக்க வேண்டுகிறேன் கடவுளே!
அப்படியே ஆகட்டுமென்றார் கடவுள்

நிரலில் செய்த
சிறு மாற்றம்
பெரு மாற்றமாக
உருவெடுத்தது

மனித மன எண்ணங்கள்
எல்லோருக்கும்
வெளிப்படையானது
கண நேரத்தில் ஆடிப்போனது
உலகம்
தனித்தனி தீவுகளாக
மனிதக் கூட்டம்

ஒவ்வொருவரின்
கோர அகமுகங்கள்
அறிமுகமாக...
அறிமுகமாக...
அதிகமாகியது
வன்முறைகள்
கலவரபூமியாகியது
பூமி!
கண்துஞ்சிக் கிடந்தார் சாமி!

இலக்கை எட்டிய
மமதையில்
எமனின் பார்வை
திரும்பியது
தேவலோகத்தின் பக்கம்

எமனின் எண்ணத்தை
படித்த கடவுள் திடுக்கிட்டார்
நிரலை பழைய நிலைக்குத் திருத்தினார்
அமைதியானது உலகம்

முறைத்தபடி....
எதிரில் நின்றாள்
கடவுளின் மனைவி!

## நகரத்தில் மரணம்...

குளிரூட்டப்பட்ட பெட்டியில்
படுத்துக் கிடந்தாள் அம்மா
தூங்கும் போது மரணம்

நல்ல சாவென பேசிக் கொண்டார்கள்
உயர் இரத்த அழுத்தம்
புருஷனை இழந்த துக்கம்
இரண்டாவது பையனின் உடல்நிலை
ஆகாத மருமகள்களென
காரணங்கள் பல அலசப்பட்டு
மெல்லத் தொடங்கின
வெற்றிலைவாய்கள்
எப்போ பாடிய எடுக்க போறீங்க
என்று கேட்ட பக்கத்து வீட்டுக்காரரின்
கடைவாயில் துருத்திக் கொண்டு
தெரிந்தன கோரப்பற்கள்
RIP குறுஞ்செய்திகளில்
நிரம்பியது அலைபேசி
எல்லோரும் வந்துட்டாங்களா
என்றகேள்விக்கு
மயான அமைதி நிலவியது
செலவுகளை எப்படி
பங்கிட்டுக் கொள்வது
உள்ளே விவாதம் தொடங்கிய
கொஞ்ச நேரத்தில்
வீசத் தொடங்கியது
பிணவாடை!

—

பா.சிவகுமார்.



---

# ஒரு கடிதம் எழுதினேன்...

நீ விட்டுப் போனது நல்ல வேளை இந்த நாட்களில் தெரிந்தது.... அழத் தோன்றும் போதெல்லாம் மழைக்குள் ஓடி விடுகிறேன்...கவிதை செய்யும் தந்திரம் தூக்கி போட்டு விட்ட தனிமைக்குள்ளும் ... எப்படியாவது கவிதையாய் வந்து அமர்ந்து விடுகிறாய்... மெல்ல சிரித்து விடுகிறேன்.... நான் அப்படி சிரிப்பது பிடிக்கும் என்பாயே... அதை நினைத்து....சரி.... தொடங்குவது எப்புள்ளியில் என்று தெரியாத பக்கத்திலேயே முடிக்கும் புள்ளியை தேடுவதால்... இது உனக்கு எழுதும் கடைசிக் கடிதம்... என்று தோன்றுகிறது...

கடிதம் ஆரம்பித்து பாதி வரை வந்த பின்னும்... நீ முதல் வரியிலேயே எப்போதும் போல் நிற்காதே.... அலங்கோலமாய் நிற்கும் வரிகள்... உன் உதடு பட்டுத்தான் இப்போதும் மலரும்.. எப்போதும் போல... நிறைய கேள்விகள்.. எனை சூழ்ந்து கொண்டு.... உனைப் பற்றியே கேட்பதை... நான் எப்படி சமாளிக்க....அனாதையாய் விட்டு விட்ட நம் குறுஞ் செய்திகளை என்ன செய்யலாம்.... நீ அழைத்த போது நான் எடுக்காமல் விட்ட, நான் அழைத்த போது நீ தவற விட்ட அழைப்புகள்... அலையும் காற்றுக்கு... இப்போது நமக்குள் ஒன்றுமில்லை... என்பதை யார் உரைப்பது.... எப்போதும் போல நானே சொல்லி விடுகிறேன்... உன் ரகசிய பாஷை அதற்கு புரியாது... எனக்கு புரியவே அத்தனை காலம் ஆனது... புரிய... புரியவே... புரியாமலும் போனதில்.. புரியவே முடியாத புரிதலின்... புரிதல்... நீயாகவே இருந்து விட்டு போ... எனக்கு புரிந்து விட்டது.......

வலிக்கையில் உணர முடியும் உயிரைத்தான் மனதென்கிறோமா.....வழுக்கி விட்ட உச்சி பாறையில்... தட்டுத் தடுமாறி நிற்கும் பாதங்கள்... நிலைத்து...முளைத்து பூவாகி விட்ட கற்பனையை.. காட்டாறு கொண்டு... கவிதை செய்தே மூழ்கடித்தது..... நியாயம் தான்... நியாயங்களில்... முத்தங்கள் ஏது.. மிச்சங்கள் என்ன...மாய யதார்த்தத்தில் முயல் தேசங்கள் காலச் சுவடுகள்...... எல்லா வரிகளும் மறந்து விட்ட அல்லது மறக்க வைத்த கைவிடப் பட்ட நூலகத்தின் கடைசி புத்தகம் போல... மௌனிக்கிறேன்...இழுத்து பூட்டி விட்டு போன கைகளின் ஓசைகள்.... இன்னமும்... வளையல் உடைக்கின்றன... வந்தாய் அமர்ந்தாய்.... பறந்தாய்... மெல்லிய பாதங்களில் உந்தித் தள்ளியதிலேயே என் மரம் வேரோடு சாய்ந்து விட்டதாக என் காதுக்குள் ரகசியிக்கிறது.... உன் மௌனம்......மீண்டும் துளிர் விடும் என்பது என் காலக் கதை... அது வரை கீழே கிடக்கும் என்.... முகம் பட்ட அழுகைக்குள்... உன் நிற மழை.... மிதக்கிறது....

கடந்து போன எல்லாமும்... அப்படியே.... அது இன்னும் தீரா நதி செய்ய...இதயம் பிசைந்து ரத்தம் கேட்பதில்தான்.... கிடந்தது தவிக்கிறது... எல்லாமும் தாண்டிய கடக்க இருக்கும் ஒன்று...எங்கிருந்து வந்தாய்... பெண்ணே... என் இலையுதிர் காடுகளை பூக்க வைத்தாய்... பின்... காக்க வைத்தாய்.... இப்போது மீண்டும்... உதிர வைக்கிறாய்.... சொல்லுக்கும்... சொல்லுக்கும்... இடைவெளி தராத நீ தான்... இடைவெளியையே நிரந்தரமாக்கியிருக்கிறாய்... இனம் புரியாத அழுகையை சுமந்து கொண்டு திரியும்...... தாய்ப்பறவையை போல.. அல்லாடுகிறேன்.... காணும் மரத்திலெல்லாம்...... உன் கிளைகள்... இலைகளாய் உதிர்வதைத் தவிர யாதுமறியா மொழிக் குளறுபடிக்குள் ஒரு சிறகை நானே வெட்டிக் கொண்டு... நொண்டுவது போல.... என் யோசனை......

தனியாய் வருவேன் என்று தானே சொன்னாய்.... பனி செய்து... உறைய வைத்து சுத்தியல் கொண்டு உடைத்து போகவா தூரதேசத்தையும் அழைத்து வந்தாய்....அறிந்தும் புரியாத அர்த்தங்களின் சூது செய்யும் முரண்பட்டு சித்திரமாக நான் இருப்பினும்.. உனக்காகத்தானே சுவர் வரைந்தேன்... எனக்காக செய்த எல்லாமும்...எனக்கே இருக்கட்டும்.... அதை உனக்கு தர உத்தேசமில்லை... இப்போதும் நீ எனை நினைத்துக் கொண்டுதானிருப்பாய்... என்பது கவிதைக்கான சாத்தியம்... வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறவே முடியாத காதலையே நாம் கொண்டோம்.... கொண்டவைகளில்... கண்டவைகள்... நம் அவைகள்....நம்மோடே முடிந்து போகட்டும்... நம் குழந்தையாக.... அது பிறக்காமலே மடிந்தும் போகட்டும்...

சாத்தியக் கூறுகளின் சகிப்புத்தன்மையோடு ... சறுக்கி விழுந்து விட்ட... பார்வைகளின் இடையே...நான் வெற்று சிராய்ப்பு என்று நகர்ந்து விடுவதில் உனக்கு ஆனந்தமெனில் அதையும் செய்கிறேன். என்று, நீ சொல்லி... தாண்டி இருக்கிறது... என் சாரல்....அல்லது என்று, நீ அடைத்து, வர மறுத்திருக்கிறது என் ஜன்னல்......தொடர் கதையை உன் வசமாகி எனைக் குறுங்கதை எழுத வைத்த வாக்கிய அமைப்பில்... நமக்கான ரகசிய புன்னகையை

இனி ஒரு போதும் உதிர்த்து விடாதே.... அது தொடர்கதையின் தடுமாற்றம்.....காவியம் பாட... கதாபாத்திரங்கள் போதும்... அது நினைவுகளைக் கொண்ட நிழற்படங்கள்...சேமித்துக் கொண்ட மூளையின் சிறுமடிப்பில் உன் பெயரை என்ன சொல்லி அழிக்க?... தாங்குமா••• மடிப்பின் தாகம்... ஏங்கித் தவிக்கும், சிறு போதைக் கவசத்தில், புத்தனின்... பசியாக.. நெளிந்து கொண்டே இருக்குமே.... உன் நினைவு....

தனியாக புலம்புவதில்... கவிதை சாகிறது... என் கனவும் செத்ததைப் போல... உனைக் காணாத தேசம் வேண்டி சிறு பிள்ளை போல.. கை கால் உதறி.. கதறும்... ஏசுவுக்கு இடப்பக்கம் தொங்கிய சிலுவைக்குள் நானாகவே ஏறி நின்று கொண்டேன்... என்னைப் போல ஒரு திருடன் காண்பதுண்டோ.... அல்லது திருடக் கொடுத்த உனைப் போல.... பெரும் மனதுக்காரியின் வரங்கள்... ஞாபகமோ....? இதே போல் ஒரு மழை காலத்தில் தானே.. உன் காட்டுக்குள் எனை நடக்க விட்டாய்.... சாரலும்••• தூரலும்... காற்றும்... தனிமையும்.. ஈரம் சுமந்து..எனை சிலிர்க்க உன் ஒற்றையடிக்குள் நான் சுற்றித் திரிய நீயே வழி காட்டிப் போனாய்... காட்டுக்குள் நம் குடிசை... பெரும்பாலும் அலைபேசியாகவே இருந்தது...குடிசை முழுக்க ஜன்னல்கள் கொண்ட நம் இரவுகளை... நீயே முடித்து வைப்பாய்...

இதோ அடுத்த மழையும் வந்து விட்ட நினைவில்... காணாமல் போன நீ திரும்பிய அவசரத்தில் காடு அழித்து பெரும் வீடு கட்டிக் கொண்டு..... ஜன்னல் அடைத்து...... 'சீ....போ...' என்று என் மழையையும் சேர்த்தே விரட்டுகிறாய்.......!

கோபங்கள் இல்லை.... வஞ்சங்கள் இல்லை.... வருத்தங்கள் கூட இல்லை.... என்ன செய்து தொலைக்க..... காதல் மட்டும் கூடிக் கொண்டே போவதை...முத்தம் கொண்ட நினைவுகளோடு, நான் தொலையத்தான் வேண்டும்...தொலைதலின் கூட்டுக்குள் உன் சூடு என்னோடுதான் இருக்கும்.... அது, நீ தந்தது..... நீ எடுத்துக் கொள்வதாக இருந்தால்.... அப்போதும் என் கூடு கலைய சம்மதமே....அடுத்த கதையில் உன் கதாபாத்திரத்தை எப்படியாவது,.... மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு.... அல்லது கல்லையே மனதாக்கிக் கொண்டு.. கொன்று விடுகிறேன்.....அது உனக்கான ஆசுவாசமாக இருந்தால்... அதில்தான் என் சுவாசம்.... பீறிடும்...... உன் வாசம் வாழ்ந்திடும்... எனக்குள்... அதுதான் பொக்கிஷம்....

நிஜம் வேறாய் இருக்கையில் என் வேரின் நடுக்கம் வீண்.... அது அறுபட்டு போகட்டும்.. ஆத்திரக் கார... அழுகையின் மிச்சமென.. அது தன்னை அடைத்துக் கொள்ளட்டும்..... சுவடுகளை சேகரிக்கவாவது தனக்குள்ளாகவே உன்னை வைத்துக் கொள்ளட்டும்.. முடியாத பக்கத்திலும்... திருப்ப வேண்டாத கட்டுப்பாட்டு காகிதம்... என் மூளையின் பரணில் இருந்து விட்டு போகட்டும்.. மனதுக்குள் போராடுவதைப் போல... கதை சொல்லிகள்... வெளியே இருப்பதில்லை.. அவர்கள்.... சிரித்துக் கொண்டும்... வாழ்த்திக் கொண்டும்.. கடந்து விடுவார்கள்.. நானும் ஒரு கதை சொல்லியே.. என் கதைகள் உன்னிடம் ஏராளம்

இருக்கிறது... உனக்கான கதைகளும்..என்னிடம் ஏராளம்••• வாழ்வின் சூட்சுமத்தில்.. பெருங்காற்று ஒளித்தல் என... உன் கூட்டுக்குள் எப்படியோ வந்து விட்ட நான் இனியும் கூட்டை சுற்றிக் கொண்டே இருப்பது சரி அல்ல.. என் வெளியும்.. அதுவல்ல.... நான் பறவைக்கு சொந்தக்காரன்... நிரந்தரமில்லாத நித்தியங்கள் இங்கு சூழ்ந்து இருக்க... நான் சென்றுவிடவே வந்தவன்... உன் பயணங்களில்... பூந்தோட்டம் வைத்து விட்ட என் பாதங்கள் இனி ஒரு போதும்.. திரும்பாது...

இந்தக் கடிதம் சொல்ல முடியாத வார்த்தைகளை உன்னிடமே விட்டு விட்டேன்... நீ படித்தாலும் சரி... கிழித்தாலும் சரி.... யாரும் அறியா நம் மழைக்குள் பதித்துக் கொண்டாலும் சரி... உன் தீர்த்தங்களின் திரை எனை விட்டு விலகுகிறது... நான் உன்னில் தங்கிய பறவை... என்பது மட்டும்.... எங்கேயாவது பதிந்திருந்தால் போதும்... அது உன் மனமாக இருப்பின், என் சிறகசைப்பு இன்னும் தூரமாகும்...

கண்ணீர் தேசம் தாண்ட வேண்டிய மனதுக்குள் ஒரு முறை••• ஒரே முறை உன் பெயர் உச்சரித்துக் கொள்கிறேன்....

—

கவிஜி,
8807215457

---

# மௌனம் சுமந்தலையும் வார்த்தைகள்...

விழியசைவில் ஆயிரம் கதைபேசுவாள்
இப்போது கண்களை மூடிக்கொண்டு
மௌனமாய் நிற்கிறாள் ..

மொழிகளெல்லாம்
மௌன கூச்சல் போடுகிறது
இதழ் திறவாய் கண்ணே ...

கன்னத்தை உரசும் தோடுகள்
பேசும் பாசை
உனக்கு புரியாதா
புரிந்தும்
ஏன் மௌனம் காக்கிறாய்...

மழையை சுமந்த மேகம்
பொழிந்ததும் காற்றில்
மண்வாசனை கிளர்த்துகிறது ..
நம் காதல் உணர்வை தூண்டவில்லையா
அவைகள் ...

## நதி - ஹைக்கூ கவிதைகள்

1)
வற்றிய நதி
பெருமூச்சு விடுகிறது
கூழாங்கற்கள் ...!!

2)
கடலின் அடங்கா தாகத்திற்கு
நதியின் நீர் ...!!

3)
நதியை தூண்டில் போட்டு
வளைக்க பார்க்கிறான் சிறுவன் ...!!

4)
நதியோடு போராடுகிறது நாணல்
பாறையிடுக்கில் பால் மீன் ...!!

5)
இலையையும் பூக்களையும்
சுமந்து கொண்டு
படகு சவாரி ....!!

6)
உயிர் நரம்புகள்
அறுந்த நிலையில் வற்றிய நதி ...!!

—

ச. ராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

---

# என்னுடன் நிறைவுற்றது

இயல்பைவிட என்வால்
சற்றே நீண்டுள்ளதைச் சகியாமல்
மொட்டையாய் வெட்டி இரசித்திட
கங்கணம் கட்டும் தங்களை
மதித்துப் போற்றுதல் இயலாதினி
நீங்கள் சுவைத்துத் துப்பிய
எலும்புத் துண்டுகளை முகராமல்
விரும்பும் மாமிசித்தை
வயிறுபுடைக்க உண்பதைப்
பொறுத்துக்கொள்ள துணியுங்கள்
தங்களின் விசுவாசியாகவும்
ஏவலாளியாகவும்
கொல்லைப்புற வாசலில்
வால்குழைத்து வயிறுபசித்து
எச்சிலொழுகும் நாத்தொங்கி
மிச்சம்மீதியை யாசித்து நிற்றல்
நேற்று என்னுடன் நிறைவுற்றது
இன்றிலிருந்து
அறுசுவையில் கமழ்கிறது
நானுறையும் வீதி
முச்சந்தியில் நின்று
தெருக்கிழிய வெகுண்டு குரைப்பேன்
என்மேல் கல்லெறிபவரைத்
துரத்திச்சென்று கவ்விக் குதறுவேன்
வருகையில் அடக்காமல்
நினைத்த இடத்தில்
மூத்திரம் கழிப்பேன்
திண்ணையில் அமர்ந்து
திமிர்முறித்து ஓய்வெடுப்பேன்
விரும்பிய இணையோடு புணர்ந்து
விதவிதமாய் பெறுவேன்
குட்டிச்சுவர்களுக்குள் அல்லாமல்
மாடிவீடுகளில் புழங்குவேன்
தங்களின் புனித விழாக்களில்
உள்நுழைந்து அங்குமிங்கும்
குலாவி மகிழ்வேன்
என் அருகாமை தங்களை

வெறுப்பேற்றலாம்
என் எதிர்நிற்றல் தங்களை
அனலேற்றலாம்
என்  அதிகாரம் தங்களை
வெளியேற்றலாம்
நிமிர்ந்து நோக்கும் உயரத்தில்
இனியென்றும்
இனிய நானும் ... நாங்களும்.... !

## ஊதாநிறத்தின் தீங்குருதி

உன்னைப் பிடித்ததிலிருந்து
வானம் பொழிகிறது
ஊதாநிறத்தின் பிரியமழை
பெருங்கடலின் நீரெல்லாம்
ஊதாநிறத்தின் அலைகளால்
மேலெழும்பி
நிலவை வாரித்தழுவிட
இரவெல்லாம் சூழ்கிறது
ஊதாநிறத்தின் ஜில்லொளி
உன் விழிகளின் மிடுக்கால்
ஊதாநிறத்தில் மின்னுகின்றன
நட்சத்திரங்கள்
விடியலிலும் ஊதாநிறம் விரித்து
பேரண்டம் கவர்கின்றது கதிர்
ஒற்றைப் புன்னகையால் தாழ்திறந்து
பூங்காற்றால் இதயம் நிரம்பினாய்
சுவாசப்பாதையெங்கும்
ஊதாநிறத்தின் நறுமணம்
உன்னை நினைத்துக் காண்கையில்
தோட்டப்பூக்கள் அத்தனையும்
பட்டாம்பூச்சியும் தேன்சிட்டும்
உருமாற்றம் அடைகின்றன
ஊதாநிறத்தில்
பயணிக்கும் தார்ச்சாலை
செழித்த வயல்வெளி
மரம் செடி கொடிகள்
ஏரி குளம் நதி மீன்கள்
வலசை பெயரும் பறவைகள்
சிட்டுக்குருவி மைனா கரிச்சான்
பூனை நாய் ஆடு மாடுகள்
ஊதாநிறத்தில் ஊர்வலம் போக
நோக்கும் திசையெல்லாம்
ஊதாநிறத்தின் ஒளிக்கூட்டம்
உற்சாகம் நிறைந்து
ஊதாநிறத்தின் மதுச்சாற்றில்
மூழ்கித்திளைத்திருக்கும்
கிரங்கிய இதயத்தில்
இரம்யமாய் வீற்றிருக்கிறாய்
நாடிநரம்புகளில் பொங்கித் திரள்கிறது
ஊதாநிறத்தின் தீங்குருதி!

## ஒன்றுமற்ற ஊர்

வருடங்கள் பலகழித்துத் திரும்புகிறேன்
அடையாளங்களற்ற திகப்பில்
புதுவேடத்தோடே சொந்தவூர்
திண்ணைகளற்ற வீடுகளை
மதில்சுவரும் இரும்புகேட்டும்
நாயொன்றும் காத்திருந்தன...
முப்பாட்டன் காலத்துப்
பாழடைந்த காளிக்கோயில்
புளியங்குளத்தருகே இடம்பெயர்ந்து
செல்வாக்கோடு  வசூல்வேட்டை
சில வீடுகளில் மகிழுந்து
எல்லா வீடுகளிலும்
மோட்டார் சைக்கிள்கள்
எண்ணிச் சொல்லிவிடலாம்
மிதிவண்டிகளை ....
தெருக்கள் அனைத்தும்
சிமெண்டும், தாரும் அப்பியிருக்கின்றன
புழுதியில் விளையாட
குழந்தைகள் குருவிகள் யாருமில்லை
அவர்களின் ஆட்டமெல்லாம்

அலைப்பேசியில் ...
விவசாய நிலங்கள் தரிசாகி
நகர்களாய் பெருகிட
நூறுநாள் வேலைக்குச் செல்லும்
ஆட்களின் பணி நிழலில் ....
ஐயனார் கோவிலில்
வேப்பிலை பாடமடித்த
காத்தவராயன் மாமா
கருப்புசாமியாகி ஆசிரமம்
கட்டியுள்ளார் ....
பழைய பள்ளிக்கூடம் இடிக்கப்பட்டு
மாரியம்மன் கோவிலோடு
திருமண மண்டபமாயிருக்கிறது ....
வசதியானவர் வீடுகளுக்கு
ஏழை மருமகளும்
குடிசையைத் தேடி
பணக்கார வரன்களும்
காதலால் இடம்பெயர்ந்துள்ளனர் ....
ஊரைவிட்டேப் பெயரா மகளிர்
துணிமணி ,காய்கசடு ,மளிகைவாங்க
இலவசப் பேருந்தில்
டவுனுக்குப்போய் வருகிறார்கள்...
ஆங்கிலப்பள்ளி வாகனங்களில்
நெருக்கியடித்துப் பிள்ளைகள்
மூடும் தருவாயில் அரசுப்பள்ளிகள்...
பாலகர்களும் போதையில்
வன்மங்களோடு திரிகிறார்கள்
ஏரிக்கரை பனைஞ்சாலை
சுடுகாட்டுப் புளியந்தோப்பு
அழுக்கெடுக்கும் வண்ணாந்துறை
அடக்கிவைக்கும் பெரியமனிதர்
இலாடங்கட்டும் வேப்பமரம்
வயதான பாட்டிவிற்கும்
முறுக்கு அதிரசம் எள்ளடை
வழியெங்குமிருந்த சுமைதாங்கி
வயிற்றுப் பசிதீர்க்கும்
வாத்தியார் வீட்டுக் கிணற்றுநீர்
ஒன்றுமற்ற ஊரில்
அந்நியனாய் நுழைகிறேன்
கருப்பும் வெள்ளையும் கலந்த
ஆட்டுக்குட்டியொன்று
பழைய சத்துத்துடன் ஓடிவந்து
என் இதயத்தை மோதிட
மேற்கில் திரள்கிறது
பலவருடமாய் ஏமாற்றிச்சென்ற
மழைவற்றிய மேகங்கள்.

## நாளைய விடியல்

பூக்கள் உதிரும்
மரத்தின் தூளியில் புன்னகைத்து
உறங்கிக்கொண்டிருக்கிறது குழந்தை
தகப்பனற்ற வாழ்வை
அம்மாவின் வலிநிறைந்த முத்தங்கள்
நெருப்பாய் சுடுவதின்
காரணங்கள் அறியாமல்
விரல்களைச் சப்பி மௌனித்திருக்கிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
நிறங்களைப்பாடி
குழந்தையின் கனவில்
புத்தனின் ஞானம் ஊட்டுகிறது
வலுத்தவன் கையிலிருக்கும்
நவீன ஆயுதங்களையோ
புலம்பெயரும் அகதிகளின்
கண்ணீரையோ
யோசிக்காத குறுகிய அதன் வெளியில்
மைனாக்களின் கொஞ்சல்கள் மாத்திரமே
இசைத்துறுகின்றன
சமூகத்தின் வன்மத்தால்
எளிதாய் தாக்குண்டு
பீஷ்மனாய் வீழ்ந்திருக்கும்
எளியோரின் குடியில்
தரித்ததின் தரித்தரம் அறியாது
சயனித்திருக்கும் துணிவில்

உருகிச்சுடரும் மெழுகினால் அல்லாது
சுட்டெரிக்கும் கதிரின் பிரகாசமானது
நாளைய விடியல்.

நீயற்ற ஆகாயம்.
*

தனிமையின் விருட்சத்தைப்
புயலாய் சூழ்கிறது
நீ நெருங்கியிருந்து செழித்த
பொய்மேக நேயத்தின் மொத்தமும்
உன் கருணையற்ற இதயத்தில்
நான் சிலுவையில் வீற்றிருக்கிறேன்
நீ என் துயரத்தைப்
புதிய உறவுகளோடு இரசித்திரு
அப்போதும் யாசித்திருப்பேன்
நீளும் உன் புன்னகையின்
நிறைந்த நதிக்காக.
*

இறுதியாய் நனைத்தமழை
கூரிய கணைகளால் தைத்து
உன் பிரிவின் இரணங்களால்
எனைப் புணர்ந்தவை
மீண்டெழும் வாய்ப்பற்றுப்
பாழடைந்த கிணற்றில்
சருகென உதிர்கிறேன்
மெல்ல என்மேல்
துகள்துகளாய் வீழ்ந்து
சமாதிசெய்கிறது
உன் நினைவுகளின் செம்புழுதி.
*

உயிர்வேரின் கிளைகளில்
உதிரும் எண்ணமின்றி
மணங்கமழ்ந்து பூத்திருக்கும்
உன் வண்ண நினைவுகள்
பிரிவைத் தீர்மானித்து
எளிதான காரணத்தால்
விடைபெற்றுக்கொண்டாய்
கருணை வடிந்த நீ!
*

பேரின்ப சந்தித்தலின்
பெருமழைகள் பொழிந்து
குறும்புகளின் தளிர்களையும்
முறுவல்களின் மலர்களையும்
முத்தங்களின் கனிகளையும்
நிறையநிறைய நிறைத்து
சொர்க்கம் தோற்கும்
ஆனந்தம் கொழித்த நீயேதான்
நியாயமற்ற காரணத்தின்
எரிமலைக் குழம்பினால்
என் யாவற்றையும் சாம்பல் செய்தாய்
பொசுங்கிக் கருகிய இதயத்தில்
இறுதியாய் புகைந்து
வடிந்துகொண்டிருப்பது
உன் நினைவுகளை மீளவழியின்றி
ஆறாக்காயங்களின் துயரநீரென்பதை
ஒருபோதும் அறிய வாய்ப்பில்லை
துணிந்த முடிவுடே
எனைப் புறக்கணித்துப் பெயர்ந்த நீ!
*

கடலெனப் பெருகிடும்
வாஞ்சையின் தேறலினால்
இனித்திட வலிந்து சேர்ந்து
கொண்டாட்டங்களோடு
இதயத்தை ஆண்டிருந்தாய்
மகிழ்வின் போதை தலைக்கேறி
சிலாகிப்பில் ஆழ்ந்திருந்த
முன்யாம இரவொன்றில்
இதயத்தின் நிலவை
எரிசொல் கொண்டு
சட்டென தகர்த்தாய்
துயரின் புழுதியில்
நிறைந்த காயங்களோடு
துடிதுடித்துப் பொடிந்து வீழ்கிறது
எவ்வித எதிர்காலமும்

வாய்க்க வழியற்ற
என் சாப வாழ்வு
*
நீயற்ற ஆகாயத்தில்
பிரிவின் இரணங்களோடு
தனித்தலையும் பறவைநான்
இனியென்றும் இல்லை
மகிழ்ந்து இளைப்பாற
சிறுவனம்
சிறுத்தடாகம்
சிறு மின்சாரக்கம்பம்
சிறுநீ!

—



பொன்.தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.

---

## கோபம் கொள்ளும் போதெல்லாம்

அன்பை மட்டுமே திருப்பி தந்தவள்,
இப்போது அன்பை தரும் போது
விலகிநிற்கிறாள்...
காரணம் கேட்க நானும்
காரணம் சொல்ல அவளும்
தயாராக இல்லாத
ஒரு நாளின் பெருமழையில்
அடித்துச்செல்லபடுகிறது...
நேசம்,
வானத்தை ரசித்த மனது
இப்போது வறண்ட வனமாக நிற்கிறது!
***

இன்றே வாழ்வின் இறுதி நாளென
அறிந்தால்
கோவிலுக்கு செல்கிறார்கள்,
பிடித்த மழையில் நனைகிறார்கள்,
திரைப்படத்திற்கு செல்கிறார்கள்,
பூங்காக்களுக்கு
செல்கிறார்கள்,
தான தர்மங்கள் செய்கிறார்கள்,
விலகியிருப்பவர்களிடம்
நட்பாய்
சேர்ந்து நடக்கிறார்கள்,
அக்கம் பக்கத்தினரிடம்
அன்பை பொழிகிறார்கள்,
பிடித்த
பயணம் செய்கிறார்கள்,
நேசித்தவர்களை பார்க்கச்செல்கிறார்கள்,
தாம் செய்த தவறுகளுக்காய்
வருந்துகிறார்கள்,
இறுதி நாளென்பது ஆரம்பித்து
வைக்கிறது.. வாழ்வை!
***

விமானத்திலா
புகைவண்டியிலா
பேருந்திலா இன்னும்
முடிவாகவில்லை...
எனது பயணம்,
எதையும் எதிர்பார்க்காமல்
தினமும் பயணத்தை
தொடர்ந்துகொண்டிருக்கின்றன...
பறவைகள்!

—

மு. முபாரக்.



# 1. உடலைப் புசித்து

கிளையைப் பரப்பி
நீர் சுரந்து
நிலம் அசைத்து
பறந்து போகும்
இந்த பறவையை
தாங்கி பிடித்த பந்தமே

நழுவி விழும்
ஓர் மழைத்துளியைப்போல்
உதிர்ந்து போகிறது இறகுகள்

நதிக்கரை ஓரமோ
சமுத்திரத்திலோ
மிச்சமும் கரைந்துபோக
வாழ்க்கையை
தேடித்தேடி அலைகிறது
நினைவுகள்.

2. பரிணாமத்தாலும் எனக்குள்ளிருந்த
அழிக்கமுடியாத காடு ஒன்றை
சுமந்தே திரிகிறது உடல்
அனிச்சையாக என் உடைகளைக்
களைந்தெறிகிறது என் உணர்வுகள்
என் நினைவில்
முளைத்துக்கொண்டேயிருக்கிறது காடு

என்னை முதலில் சுமந்து கரைசேர்த்த
மீன் மிருகம் உடலில்
நீந்திக்கொண்டேயிருக்கிறது
அந்த கணம் அவளும் களைந்தெறிந்த
ஆடைகளற்ற பொழுதில்
காடுகளின் வாசனை
பற்றிக்கொண்டு எரிந்து தீர்ந்துபோகிறது
காடு

பரிணாமத்தால் கடத்தப்படாமலேயே
விதைகள் எரிந்து சாம்பலாய்
கெஞ்சுகிறது பச்சையத்தின் யாசகனாய்

தழைக்கிறது உலோக உடல்கள்.

3. கல்வீசிய குளத்தில்
ஓயாது அலைகள்
திரி கசக்கி அனல் பிறந்தும்
சாயாது சுடர் அலைகள்

விட்டில் விளக்கில் தேடுவது என்ன?
மரணித்து கதவு காகிதம்
வழியே விடுதலை

தேனீ பூக்களில் தேடுவது என்ன?
மதுவில் மயங்கி
பூவுக்குள் கைதாகி
சொட்டு சொட்டாக இதழ்களின்
விடுதலை

தட்டாமல் திறக்கும் வானம்
சுவர் இல்லாமல் இருக்கும் வீடு
எங்கும் வியாபித்திருக்கும்
தெய்வீகம்
ஓயாது அலைகள்
ஓயாது அலைகள்

பிரபஞ்சத்தில்
ஓயாது அணு அலைகள்.

4. அழகான சிம்பனியை
இசைக்கிறது

அந்த மூங்கில் புதர்

அதில் வந்தமரும் பறவைக்கென்று
ஒரு இடைவெளியை விட்டு வீசுகிறது
மூங்கிலின் இசை

நீண்ட தூரம் பாதை தேய
வந்து மேயும் கிடை ஆடுகளுக்கு
ஒரு மயக்கம்

மூங்கில் இசையைக் கேட்டவாறே
உறங்கிய பறவையை எழுப்பியது
அவ்வப்பொழுது ஆட்டின் குரல்

புற் பாதங்களில்
தோய்ந்து கிடக்கிறது மிச்ச பசி

இரவின் வருகையை உறுதிப்படுத்த
நிலாவின் பாடல் வந்தாயிற்று
கவனமும் திரும்பியாயிற்று
மீண்டும் பாதை தேயப் பயணம்

இந்த இரவு முழுவதும்
கூரைக்குள் ஸிம்பனி தான் எங்கும்.

—

ப.தனஞ்ஜெயன்,
*danadjene1979@gmail.com*
*9751800333*



## பெட்டிகளை சுமந்து

தண்ணீரில் தத்தளிக்கும்
சரக்கு கப்பலை போல்
உன் நினைவுகளை
சுமந்து தத்தளிக்கிறேன்
தண்ணீரில் அல்ல!
கண்ணீரில்!!

நினைவுகள்...

—



CM. சிவா,
வடுவூர்.

# மீண்டும் பிறந்தேன்...!

மீண்டும்
எழுத தொடங்கு....!

உயிர்பெற்று எழும்
வார்த்தைகள் எல்லாம்
வானம் தொடும்..!

மீண்டும்
சுவாசிக்க தொடங்கு...!

உயிரும் சுவாசிக்கும்.
உயிரற்றவைகள் உயிர்பெறும்.

அவள் நடந்த பாதை
அவள் நினைவுகள்
சுமக்கும்...!

யாருமின்றி கிடக்கும்
பாதை -ஒருபோதும்
தன் வேதனைகளை
சொல்லி அழுவதில்லை..!

கோடை வெயில்
வேதணையில்
கூழாங்கற்கள்..!

யாருமின்றி தவிக்கும்
ஒற்றையடி பாதை...!

தூரதேசம் என்று
ஒதுங்கி நிற்கும்
பணை மரங்கள்..!

ஆவாரம் பூக்கள்
அழுது லாபமென்ன...?

அ.செல்வராஜ். க.நா.ஊர்.
உடுமலைப்பேட்டை.

நன்றி.

—

அ.செல்வராஜ்.
2/172. கண்ணமநாயக்கனூர்.
உடுமலைப்பேட்டை தாலுகா.
திருப்பூர் மாவட்டம்.
கைப்பேசி: 9524960630.
மின்னஞ்சல்: selvaknr1984@gmail.com

# தேடல்

உறவுகளுக்காகவும்
உறவுகளோடும்
குழுமியிருக்கிறது
ஓர் இரயில் நிலையம்

நிற்கும் தொடர் வண்டிகளுக்கு
இணையாக வந்தடைகின்றன
வெளியூர் வண்டிகள்

பாதங்களின்
சுவடுகளைத் தின்று
தட்டையாகியிருக்கும்
நடைமேடையில்

கால்களுக்கிடையே
வளைய வந்து தாயினைத்
தேடியலைகிறது
குட்டி நாய்!

எனது இந்தக்கவிதை இதுவரை
வேறெங்கும்
பிரசுரமாகவில்லை
என உறுதி அளிக்கிறேன்.

# நகர்தல் தத்துவம்

'மைலேஜ்' எவ்வளவு தரும்
அடர்நீலத்தில் இருக்குமா
துருப்பிடிக்குமாவென்கிற
ஆயிரம் கேள்விகளோடு
வாஞ்சையோடு
வரவழைக்கப்பட்டது
புதுவாகனம்

மஞ்சளிட்டு புதுமாலைசூடி
வாசல்வழியாக உள்நுழைந்தன
இருசக்கரங்களின் கால்கள்

வெகுதூரம் ஓடிக்களைத்து
ஓய்வுநிறத்தில் மாறியதும்

கொல்லைப்புறத்தில்
கொஞ்சம் கொஞ்சமாக
நினைவுத்துருவைக்
கக்கத் தொடங்கியிருக்கிறது

ஓரடிகூட நகரவியலாமல்
பஞ்சாராகிக் கிடக்கும்
முதுமை வாகனம்!

—

ரகுநாத் வ,
மதுரை.

# நீலவேணி....

குப்பையைத் தூக்கி
எறிந்தவள்...
இந்தாம்மா...இங்க
என்ன பண்ற
போ...போ.... என
விரட்டியவளை
ஒரு நிமிடம் நிமிர்ந்து
பார்த்துவிட்டு
சரிம்மா....போயிடுறேன்
எனக் கூறிய நீலவேணி
அடுத்த தெரு, சாலையோரம்
வீதியோரங்களில்
கிடந்த உடைந்த
நெகிழிப் பொருட்கள்,
கண்ணாடி பாட்டில்கள்
தகரம், இரும்புத்துண்டுகள்
என பழைய பொருட்களைச்
சேகரித்து அதை
தான் வைத்துள்ள
பையில் போட்டுக்
கொண்டு,
பழைய பொருட்கள்
வாங்கும் கடைக்குச்
சென்று எடைக்குப்
போட்டு, கிடைத்த
வருமானத்தில்
வீட்டுக்குத் தேவையான
பொருட்களும்
தன் மகள் வான்மதி
வாங்கி வர சொன்ன
கை வளையலையும்
வாங்கிக்கொண்டு
வேகமாய் வீடு வந்து
சேர்ந்தவளுக்கு ஒரு
இன்ப அதிர்ச்சி...
மகள் கையில் கேடயம்
இருப்பது கண்டு...

அம்மா....நான் முதல்
பரிசு வாங்கி இருக்கேன் என்ற
கூறியவளிடம்
எதற்கு இந்த முதல்
பரிசு வான்மதி? என்று
கேட்டதும்
அம்மா என் ஸ்கூல்ல
இன்னைக்கு "இயற்கையை பாதுகாக்கும்
முறைகள்" என்ற
தலைப்பில் நடந்த
பேச்சுப்போட்டியில்
நான் வெற்றிப் பெற்றுவிட்டேன் அம்மா
என்றவளிடம்
அப்படி நீயென்ன
பேசினாய் என்று
கேட்டதும்
உன்னைப் பற்றித்தான்
பேசினேன் அம்மா
நன்றாக படித்தவர்கள்
கூட குப்பைகளையும்
பழைய பொருட்களையும்
கண்ட கண்ட இடத்தில்
போட்டுவிடுகிறார்கள்
அது மட்டுமல்ல
அவர்களால் இயற்கைக்கு எதிராக
நாம் செயல்படக்கூடாது
என்று சொல்ல மட்டுந்தான்
முடியும்.
ஆனால் என் அம்மா

போன்றவர்களால் தான்
இந்த பூமிக்கு எதிராக
இருக்கும் பொருட்களைச்
சேகரித்து, மறுசுழற்சி
செய்யுமிடத்தில்
கொண்டுப் போய்
சேர்த்து, இயற்கையை
காத்து வருகின்றனர்
என்று நீ செய்யும்
தொழிலைப் பற்றி
பேசினேன்.
எல்லாருடைய
கைத்தட்டலும், இந்த
பரிசும் எனக்குக்
கிடைத்தது என்று
கூறியவளை
ஆனந்தக் கண்ணீருடன்
உச்சிமுகர்ந்தாள்
இயற்கை அன்னையின்
பாதுகாவிலியான
நீலவேணி....

- எழுத்தாளர்,
மு. ஜெரோஷா,
திருப்பூர்.

---

# 1. அவளதில்காரம்

நாம்
யாருடனும்
ஒப்பிட முடியாத
காதலில்
முழ்கியிருக்கும் பொழுது
மழைத்துளியின் வருடலுக்கு
சருமங்கள் பதிலளித்து விடுகின்றன
இன்று போய் நாளை வாவென........

மயில் தோகைகளை
ஆசையாக சேகரித்து
அவள் படித்து முடித்த புத்தகத்தில்
செருகி
அதனுடே ஆரம்பமாகிறது
மயில் தோகையின் வண்ணமாகிய
காதல் மழை....!

உன் மனதின் சிறு ஓரங்களின்
மறைவுக்காக நெடுங்கால மழையைக்
கேட்கிறேன்...
நீ
ஒரு துளி காதல் கொடுக்கிறாய்....!

எனது
உத்திரவாதங்கள்
உனது முத்தங்களின்
மத்தியில் களைந்து போய்விடுகின்றன
இருப்பினும் இதோ
வைத்துக்கொள்
என் இதயம்
அடுத்த முத்தம் தருவதற்கு முன்னே
சம்மதம் பெற்றுவிடு.....!

இதழைப்பார்த்தேன்
வானம் பார்த்தேன்
மீண்டும் இதழைப் பார்த்தேன்
மழையைப் பார்த்தேன்
இதழ் வெடிப்பை பார்த்தேன்

வறட்சியை பார்த்தேன்
காதோர முடிப் பார்த்தேன்
தூரமான குதிரையின் அலாதியான வால்
பார்த்தேன்
இதயம் பார்த்தேன்
பூசிய வண்ணம் பார்த்தேன்
தூரமாக பூசிக்கொண்டு பறக்கிறது
அணியின் பட்டாம்பூச்சி.......

ஒட்டுமொத்தமாக
சொல்லிவிடு
இந்த மௌன நடையில்
முதல் பாதம் யாருடைய குத்தகை......
யாரை ஈர்த்து தள்ளும் ஒத்திகை....

---

2.ஆள்மாறாட்டம்

நீண்ட நேரமாக வாசலில் நின்றவரைப்
பார்த்து நல்லகாரிய வினையங்களை
கூறிய குடுகுடுப்பக்காரனை நகரச்
சொல்லி கடந்து செல்கிறான் இதுவரை
இவன் கூறியதை காது கொடுத்து கேட்ட
கடன்காரன்
வீட்டின் சொந்தகாரன் அனைத்தையும்
கேட்டு
புன்னகைத்துக் கொண்டே இருக்கிறான்..
படுத்த படுக்கையான சூழலை சோற்றில்
மறைக்கும் அவனின் பொய்களை
எண்ணி.....!

---

3. வெட்டி கௌரவம்

தினம் காலையில்
ஆற்றங்கரை வருபவன்
அன்று மறுத்த கால்களுடன்
படிக்கட்டில் அமர்ந்திருக்கிறான்...
முகம் கழுவி கிழக்கு பார்த்து வணங்கி
திரும்பி
பார்க்கையில் அவனது மரியாதை
இல்லாத செயலை அங்கு அலசி நீரில்
விட்டார் வயிறுடன் வாய் எரிந்த
கோவை துப்பலுடன்...
இருவருக்கும் இடையில் மறுத்துபோய்
கூசுகிறது
வெட்டிக் கௌரவம்...
பாவம் மறுத்துப் போன காலும்
எச்சில் துப்பிய நீரும்
ஒன்றையொன்று பார்த்து களையத்
தொடங்கின.....!

---

4. மகளுடையாள்

இராமயணம் தனை பார்த்தப்பிறகு
இராமனாக நடக்க முயல்கிறார்.....
மகாபாரதம் கதையை அறிந்து
பாண்டவர்களின் மைந்தனாய்
காட்சியளிக்கிறார்
மதுரைவீரன் திருவிழாவிற்கு பிறகு மீசை
முறுக்கி வேட்டையாடுதலின் உண்மை
அறிகிறார்
அனைத்தையும் கண்ட அவருக்கு
அப்பாவாக காட்சியளிக்க ஏதும்
சந்தர்ப்பம் வாய்க்கவில்லை என்பதே
மகளின் கவலை...!

---

5. பச்சையப் பயணம்

*பலவருட ஆலமரம்*
*விழுதுகளை*
*தரையிறக்கி விட்டும்*
*இலைகளை*
*இடையிறக்கி விட்டும்*
*உதிர்த்த கூந்தலாய் கிளைகளை*
*அசைக்கும் பொழுது நழுவி விடாமல்*
*பார்த்துக்கொள்கிறது*
*ஆலமரத்திற்கும் அந்த சிறு புல்லுக்கும்*
*பிணைப்பை கொடுத்த*
*இயற்கையின் யுக்தி*
*இலையுதிராமல் தான்*
*பயணிக்கின்றது.....!*

---

6. கவித்துளிகள்

*எனது அலமாரியில் அடுக்கி வைத்த*
*புத்தகம் அனைத்திலும்*
*ஒவ்வொரு சூழலும்*
*வாழ்வியலும் படர்ந்திருக்க*
*அடுத்த அடுத்த பக்கங்களை*
*மிக எழுதில் புரட்டித் தள்ளுகிறாள்*
*மழலையான மகள்...!*

---

*அரையடி நீளத்திற்கு மண்குவித்து*
*இரு கைகளை குவித்து மறைய வைத்த*
*குச்சியை*
*எடுக்க இநலாமல் மறைந்து போகுமென*
*தெரியாது*
*எத்தனைப்பேர் துலாவினாலும்*
*கிடைக்காத இறந்தகால மௌனக்குச்சி*

---

*அலகு நீண்டிருந்த இடத்தில்*
*பசி நுனியில் வலையிட்டு*
*அமர்ந்திருந்த்து*
*பசியோடு நெருங்கிய கொக்கிற்கு*
*வயலை தனிமையில் விட மனமின்றி*
*குனிந்த அலகோடு இடம்பெயர்கிறது*
*பசித்தலை தனிமையில் அமரவைத்து....!*

---

*அவள் பாதங்கள் பலமுறை திட்டி*
*தீர்த்திருக்கும்*
*அவள் விரல்கள் வீணைகளில் பல*
*ராகங்கள் பாடியிருக்கும்*
*மொத்த வலியும் இடையேறி விழ ஒரு*
*கணம் கண்களை கூசுகிறது*
*யாருடைய சாயல் என கதவுக்கு*
*வெளியே எட்டிப்பார்க்கும் என்*
*சாயலுக்காக....!*

---

*இழப்பு என்பது வேறொன்றுமில்லை*
*விரும்பி எடுக்கும் கல் திரும்ப திரும்ப*
*கீழே விழும்போது*
*எடுத்து உதறும் மண்ணோடு உள்ள*
*கல்லின் சிறு ஈர்ப்பே இழப்பாகிறது.....!*

---

கவிஞர் சே கார்கவி,
நாகப்பட்டினம்.



# வாழ்த்து மடல்..

அன்பு தோழிக்கு..

சிறிது தயக்கம்...
சிறிது குழப்பம்..
சிறிது பயம்...
சிறிது எதிர்பார்ப்பு..
சிறிது ஆறுதல்..
சிறிது வருத்தம்..
பெரிது மகிழ்ச்சி...
உனக்கான இந்த வாழ்த்து மடலை
எழுதும் போது ..

வார்த்தைகள் ஆதமாத்தம் ஆனவை...
விரும்பினால் புன்னகை செய்..
இல்லை என்றால் மண்ணி...

வாழ்வில் ஒரு சிலருக்கு ஆத்மாத்தமான
கடிதம் எழுத தோன்றும்..

தொலைவில் இருக்கும் பொழுது
அம்மாவுக்கு..

சிரமங்களை எதிர்கொள்ளும் பொழுது
அப்பாவுக்கு..

நினைவுகள் தலைதூக்கும் பொழுது
தோழனுக்கு...

ஆறுதல் பெற தோல் சாய தேடும்
பொழுது தோழிக்கு..

அறிவுரை கூறும் பொழுது மகனுக்கு..

பிரிவினை எதிர்கொள்ளும் பொழுது
மகளுக்கு...

இவையாவும் இன்றி..
அன்பின் மிகுதியாய் நம் வாழ்வில்
கடந்தவர்களின் உணர்வுகளை நம் மனம்
நாடும் பொழுது..

மேற்கூறிய யாவும் நாம் சந்திதவர்களே...
ஆனால் கடைசியாக கூறியவர் நம்
சிந்தையில் தினம் நிந்திபவர்கள்...

இது ஒரு சிலரே நம் வாழ்வில்...

நீ அத்தகையவள்....

என் அன்பின் வெளிப்பாடு..
உன் கண்ணாடியில்..
நீ சிரிக்கும் பொழுது அழுகாது
அழுகும் போது சிரிகாது..

உன் உணர்வே என் மனதின்
வெளிப்பாடு..
நீரில் இருந்து மீன் பிரிந்தால் உயிர்
துறக்கும்..

அன்பே என் மன சங்கமத்தில் உன்
நினைவு நீங்குமாய்யேன்..
என் நிலையும் நீரில் பிரிந்த மீன் தான்...

—

கவி பாரதி. சதிஷ்



# கூத்தாடியின் மகன்

இந்த ஆண்டோடு, ஆறு வருடங்கள் ஆகிவிட்டது. இளமாறன் கோடம்பாக்கம், திரைத்துறையில் சேர்ந்து, இயக்குநராகிடனும் என்று இந்த ஆறு வருடங்களில், முதல் இரண்டு வருடங்கள்.. ஒரு பட தயாரிப்பு நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து படக்குழுவில் இணைய முடியாமல்.. அதற்கு சம்மந்தமில்லாத, வேலைகளில் பழகி, அங்கிருந்தவாறே இயக்குனரின் வேலைகளை உன்னிப்பாய் கவனித்து வந்தவன்..

ஒருநாள் அவனின் மானசீக குருவாக, மனதில் வரித்துக்கொண்ட, இயக்குனர் பேரரசு மணிராஜாவின், படத்திற்கு வேலை செய்ய, தான் வேலை செய்யும் படக்குழுவிற்கு வாய்ப்பு வந்ததை எண்ணி, உற்சாகமாகி போனான். யாரிடம் சேர்ந்து சினிமா பழகனும் என்று எண்ணி, அரியலூரில் பேருந்தில் ஏறினானோ, அந்த இயக்குனர் படத்தில், அவனுக்கு வேலை.. அவரின் திரைபடங்களின் மீது அவனுக்கு அபார மரியாதையுண்டு. ஒவ்வொரு படத்தையும், பல முறை பார்த்துவிடுவான் அவன்.

அரியலூரில் வெளியாகும் படத்திற்கு, அந்த படத்து நாயகனுக்கு வைக்கும் விளம்பர பதாகையை விட, தன் குருவான இயக்குனருக்கு பெரிதாக விளம்பர பதாகை வைத்து, பெருமை கொள்வான். அவனுக்கு 17 வயதில் கிளம்பிய, திரைப்பட ஆசைக்கு அடிவேராக இருக்க, மணிராஜாவே காரணம். அவரிடம் உதவி இயக்குனராக, சேர வேண்டும் என்ற ஆசை.. அவனுக்குள் வளர்ந்துக்கொண்டே வந்தது.

12ஆம் வகுப்பு முடித்தவுடன்.. கல்லூரில சேர சொல்லிய போது.. அவன் திரைபடக்கல்லூரியில் சேர, அப்பாவிடம் மல்லுக்கட்டினான். அவன் ஆசைக்கும், அப்பாவின் ஆசைக்கும், சேர்த்தே அப்ளிகேசன் வாங்கி, இரண்டுக்கும் அப்ளை செய்த போது.. கல்லூரியில் சேரவே அவனுக்கு அழைப்பு வந்தது.

அதென்னவோ.. திரைபடக்கல்லூரிக்கு அழைப்பு, கை நழுவியது. போதிய மதிப்பெண் இல்லாத காரணம்.. வாய்ப்பு இல்லாமல் போனது. ஆனால் அப்பாவின் ஆசைக்கு, கல்லூரி சேர போனான். மொத்த கல்வி கட்டணத்தையும் கட்டி, ஒரு மாதம் வகுப்புக்கு போனான். பாடங்கள் மனதில் பதியவில்லை. எல்லா பாடங்களின் வகுப்பிலும், மணிராஜா படக்காட்சிகளே வந்து போயின. அவனால் பாடத்தோடு ஒன்ற முடியாது போயிற்று. அப்பாவிடம் சண்டையிட்டான்.

"தேவையில்லாம என்னை கல்லூரில சேர்த்துவிட்டீங்க.. அங்க போனாலும்.. எனக்கு சினிமாதான் கண்ணுல நிக்குது.. ஏம்ப்பா என்னை.. விட்றுங்களேன்.. தம்பிய உங்க

விருப்பம் போல படிக்க வையுங்களேன்.. நான் திரைப்படத்திற்கு போறேனே.." அப்பா உக்கிரமா பேசினார்.

எப்போதுமே, ஏக வசனத்தில், பேசித்தான் அவருக்கு வழக்கம். அடித்தொண்டையில்.. கத்தி பேசி, பாட்டு பாடி கூத்துக்கட்டி ஆடிகளைத்த, கூத்தாடியாயிற்றே அவர்..

ஆடி மாதம், பங்குனி மாதம் கிராம திருவிழாக்களில், ஓயாது ஆடிக்கொண்டிருந்தவர்தான். 48 வயதுக்கு மேல் ஆடிய ஒரு தெருக்கூத்தில், ஆட முடியாது மயக்கமாய் நெடுஞ்சடையாய், பெரிய மரம் இடிதாக்கி வீழ்வதை போல வீழ்ந்து போனார். அதன் பின் அவரால் ஆட முடியாமலே போனது. தெருக்கூத்து உலகமும் அவரை மறந்தே போனது.

பத்து தலை ராவணன் வேஷங்கட்டி, ஆடுகையில் தான், இளமாறனின் தாய், அவரை கண்டாள். கூத்துக்காரனின் மகளான, அவள் வாழ்க்கையும் கூத்துக்காரனோடே விதி கொண்டு வந்து சேர்த்தது. எந்த வசதி வாய்ப்பும் இல்லாத வாழ்க்கை. தன் தாத்தனின் சொத்து, தந்தை அழிக்காமல் தந்துவிட்டு போன, இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிர் ஜீவனம் செய்து வந்த, 'பத்து தல ராவணன் கமலகண்ணன்' கூத்து வேஷம் கட்டுவதை நிறுத்திய பின்னே, தன் வாழ்க்கையை திரும்பி பார்த்தார்.

ஏதும் சேமிப்போ, சுகமான வாழ்க்கையோ இல்லாத வாழ்வு.. மணியாய் பெற்ற இருபிள்ளைகள்.. இளமாறன், சுகுமாறன் என்று பெயர்.. இந்தளவில் தான் அவரது வாழ்க்கை.. தான் பெற்ற கஷ்டங்கள் தன் பிள்ளைகள் படக்கூடாது என்றுதான் படிக்க வைத்தார். படிக்கட்டும், நல்ல வேலைக்கு போகட்டும்.. என்று மட்டும் தான் அவரது எண்ணமாய் இருந்தது. ஆனால் இப்போது, வயிற்றில் நெருப்பை அள்ளிப் போடுகிறானே.. பெரியவன்..

"டே.. மாறா.. ஒங்கொப்பன் பொழப்பு கூத்தாடினதுலேயே போயிற்று.. வேண்டாம்டா.. இந்த கலை பொழப்பு.. சீரழிந்து போனது நானாக மட்டுமே இருக்கட்டும்.. இனி இந்த வீட்டிலிருந்து ஒருத்தனும்.. கூத்து கலை சினிமான்னு போக வேண்டாம்.. உருப்பட பாருடா.. எங்கப்பா சொன்னத, கேட்காம கெட்டவன்டா நான்.. இப்போ நா சொல்லி நீயும் அப்படி போயிடாதே.. வேணாம்டா..படிச்சி நல்ல வேலைக்கு போய் கல்யாணம் பண்ணு.. நல்லா இருப்பேடா.." அவர் சொன்னது எதுவுமே அவனது காதில் ஏறவில்லை. அவர் பேசிய நேரமெல்லாம்.. மணிராஜா வின் கதைபாத்திரம் வசனம் பேசுவதாகவே, அவன் நினைத்துக் கொண்டான்.

"இல்லேப்பா.. நீங்க சிரமப்பட்டது போல நானும் சிரமப்படுவேன்'னு, நீங்க நினைக்கிறது

தப்புப்பா.. உங்க விதி உங்களுக்கானது மட்டுமே.. அது எனக்கானதல்ல.."

இதை கூட மணிராஜாவின், ஒரு படத்தில் கதை நாயகனின் வசனம்.. அவனையறியாமலே அவன் அப்பாவிடம் பேசினான்.

"அடி..செருப்பாலே நாயே.. உன் வாழ்க்கையை பத்தி, நான் பேசினா.. சினிமா டயலாக் விடறியோ.. ஒழுங்கு மரியாதயா.. சொல்ற பேச்சை கேக்கனும்.. இல்லேனா காலை ஒடச்சி சோத்தப்போட்டு காப்பாத்துவேன் பாத்துக்க.." கத்தினார். இளமாறன் அதற்கு மேல் பேசவில்லை.

அவனின் அம்மா தான் குறுக்கே வந்தாள். "எதுக்கு இப்படி கத்தனும்.. புள்ள சொன்னா கேட்டுக்குற வயசுல தானே இருக்கான்.. ஏதோ சினிமா சினிமாங்கறான்.. எல்லாம் ஒங்க ரத்தம் தானே.. மாமா எத்தன சொன்னாரு? நீங்க ஒத்த பேச்ச கேட்டீரா? எல்லாம் உங்க ஒடம்புல ஓடற ரத்தம் தானே? நான் சொன்னா கேட்பான்.. நீங்க சத்தம் போடாதீங்க.. போங்க அவன் காலேஜ்க்கு போவான்.." என்றாள்.

ஆனால்.. விடியற்காலை, அவள்தான் அவனை எழுப்பினாள். அவன் எழுதி வைத்த கதைகளின் முதல் ரசிகையாய், அவனது அம்மாதான்.. இருந்தாள். அவளும் கூத்துக்கட்டியவரின் மகளானதால்..கதைகளை ரசித்து படிப்பவள். மகன் இரவெல்லாம் எழுதிவைத்து, அப்படியே, தூங்கியவனின் கதைகளை, நடு இரவிலே, அடுக்கி வைத்து படித்து முடித்து ரசித்துவிட்டு, தூங்கும் மகனின் நெற்றியிலே அன்பாய் ஒரு முத்தம் தந்து, அவனின் கதை எழுதும் திறமையில் நம்பிக்கை வைத்தவள். என்றேனும் ஒருநாள், மகன் சாதிப்பான் என்பதிலே அவளுக்கு அசைக்க முடியா நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை உந்துதலில்.. காலையில் இளமாறனை எழுப்பினாள்.

"மாறா..நீ கிளம்பு. அப்பாவ நான் சமாதான படுத்திக்கிறேன்.. உன் மேல எனக்கு நம்பிக்கை இருக்குடா.. நீ சாதிப்பே.. கிளம்பு போ.. உன் எண்ணப்படி தேடு.. உன் நம்பிக்கை இருக்கும் வரை அங்க இரு.. வாய்ப்பு கிடைக்கலனா.. திரும்ப வந்திடு.." என்று கையில கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பி வத்தாள். அந்த நிமிடம் இளமாறனின்..நெஞ்சம் முழுக்க அவனது அம்மாவே இருந்தாள். அவளது எண்ணத்தை எப்படியும் நிறைவேற்றனும் என்ற உறுதியோடு, பேருந்தில் ஏறினான்.

பட நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்த, இரண்டு வருடம் கழித்து, இயக்குனர் மணிராஜா வின் படத்தில், வேலை செய்வது இதுவே முதன் முறை.. அத்தனை மகிழ்ச்சி அவனுக்கு. அவர் இயக்கும் போதெல்லாம் அவருக்கு சமீபமாய்.. அவன் இருந்தான். அவர் நடிகர்களுக்கு நடித்துக்காட்டிய விதம், அவனுக்கு ஆச்சர்யமாய் இருந்தது.

எவ்வளவு உணர்வாய், நடித்துக்காட்டுகிறார். இரண்டு வருடங்களில் எத்தனையோ, டைரக்டர்களின் இயக்கத்தை, பார்த்து விட்டான். ஆனால் இவரைப்போல், முழு திருப்தி வரும் வரை, நடிகர்களை விடாதவர்களை அவன் கண்டதில்லை. அவர்களுக்கு நேர்மாறாய்.. இயக்குனர் மணிராஜா இருப்பதை, ரசித்தான்.

அன்று ஒருநாள்.. கதை நாயகன் தாய் இறந்து கிடப்பதை போல் காட்சி.. மணிராஜா அழுது நடித்துக் காட்டியதை கண்ட போது, இளமாறனின் கண்களில் கண்ணீர்.. அவனையுமறியாது, பலத்த ஓசையில், கைதட்டி விட்டான்.. கைத்தட்டலை கண்ட படக்குழுவே, அவனை பார்த்த போது.. அவனுக்கு அதுவெல்லாம் தெரியவேயில்லை. கையை தட்டிக்கொண்டே இருந்தான்.

"ஸ்டாப் இட்"

சத்தமாய் வந்த குரல் கேட்டு, பயந்து போன இளமாறன்.. சட்டென கைதட்டுவதை நிறுத்திவிட்டு.. எச்சிலை விழுங்கி கொண்டே, இயக்குனரை பார்க்க, மணிராஜாவும், அவனை பார்த்தார். அதன் பிறகு, லஞ்ச் பிரேக்கில், அவரின் உதவிஇயக்குனர்.. இளமாறனிடம் வந்து,

"உன்ன இயக்குனர் கூப்பிடறார் வா" என அழைத்து போய், இயக்குனர் முன் நிறுத்திய போது.. அவனுக்கு உடம்பெல்லாம் உதறி விட்டது. அவனை ஏற இறங்க பார்த்த மணிராஜா..

"என்ன தம்பி.. அந்த காட்சியில அப்படி என்ன இருக்கு'னு, கை தட்டின.. நா பார்த்தேன்.. உன் கைதட்டல்'ல, போலி இல்ல.. உன் கண்ணுல, கண்ணீர் வந்துச்சு.. அது சாதாரணமா வராது.. ஆனா உனக்கு வந்துச்சு..சொல்லு அந்த காட்சியில, என்ன பார்தத.. என்ன ப்பீல் பண்ணின?" கேட்டார்.

இளமாறன் சொல்வதறியாது நின்றான். தான் மானசீகமாய், குருவாக வார்த்தெடுத்துக் கொண்டவரிடம், இப்படி ஒரு சூழல் வருமென, அவன் கனவிலே கூட கண்டதில்லை. பேச முடியாமல் தவித்தான். இயக்குனர் மணிராஜாவே பேசினார்.

"தம்பி சொல்லு.. முதல்ல நான் ஒரு டைரக்டர் என்பதை மற.. எதுக்கு கைதட்டினியோ அதை உண்மையா சொல்லு.. பயமே வேணாம் உனக்கு" என்றார்.

கொஞ்சம் தைரியம் வந்தவனாய்.."சார்.. அந்த காட்சி உணர்ச்சியமயமாய் இருந்துச்சு..

வசனம் கூட இல்ல.. உண்மையில அந்த காட்சிக்கு, வசனமே வேணாம் சார்.. டைமிங் கூட மூனு நிமிசம்.. இருக்கும்ன்னு நினக்கிறேன். ஆனால் நீங்க கதறி அழுதும் பின் மௌனமாய் குலுங்கி அழுததும்.. ரொம்ப உணர்ச்சி வசப்படுத்தும் காட்சி சார்.. நீங்க நடிச்சிக்காட்டிய போது, அத நடிப்பா நான் பாக்கல.. நாலு மாசம் முன்ன உங்க அம்மா இறந்ததை, நினைச்சி, அழுததா தான் நான் பாத்தேன்.. எனக்கும் கண்ணுல அழ வந்திடுச்சு சார்.. " சொல்லிவிட்டு, அவரை பார்த்தான்..

மணிராஜாவின் கண்கள் கலங்கி இருந்தன..

"எஸ்.. அந்த காட்சியில.. நான் என் அம்மாவைத்தான் நினைச்சுக்கிட்டேன்.. ஆனால் உனக்கு அப்படி தோணினதுதான் ஆச்சர்யம்.." அவர் சொன்னதை கேட்டு அவனுக்கும் மகிழ்ச்சி.. மேற் கொண்டு, எதுவும் பேசாது, மணிராஜா அமைதியாகி போனார்.

படப்பிடிப்பு முடிந்த நேரம்.. அவனின் நிறுவன மேலாளர்.. அவனை அழைத்தார்.

"மாறா.. இனி உனக்கு இங்க வேலை இல்ல..நீ கௌம்பலாம்" என்றார்.. அவனுக்குள் அதிர்ச்சி..

"அண்ணே ஏன்னே.. நா என்னன்ணே பண்ணேன்..?" சோகமாய் கேட்டவனை, மானேஜர் எழுந்து வந்து தட்டிக் கொடுத்தார்..

"மாறா.. உனக்கு இங்க தான் வேல இல்ல.. ஆனா இனிமே நீயும்.. மணிராஜா சாரோட துணை இயக்குனரில் ஒரு ஆள்.. சார் போன் பண்ணினார்.. அவர டச் பண்ணிட்ட நீ.. யாருக்கும் கெடைக்காத வாய்ப்பு மாறா.. அந்த மனுசன் கிட்ட சேர்ந்துட்ட.. இனி உன் கனவெல்லாம் நிஜமாகும்.. கவல படாத..சீக்கிரம் வேலைய கத்துக்கோ ஒரு அஞ்சு படமாவது அவர்ட்ட வேலைய செய்.. ஆனா உன் பாணியை ஒன்னு ஏற்படுத்திக்க.. ஜெயிக்க அது ஒன்னுதான் வழி.. காலைல ஏழுமணிக்கு அவர் அலுவலகத்தில் போய் பாரு.." அவன் கண்களில் கண்ணீர் கொட்டியது. மேலாளரின் காலில் விழுந்து எழுந்தான் இளமாறன்.

காலையில் மணிராஜாவின் அலுவலகத்தில், அவரின் காலை தொட்டு வணங்கினான். அவர் தடுத்தார். அவன் தலை மீது கை வைத்து ஆசீர்வாதம் செய்தார்.
இதோ அவரோடு நான்கு ஆண்டுகள், ஏழு படங்கள்.. திரைத்துறையை கற்றான். இந்த ஆறு வருடங்களில்.. அரியலூர் வீட்டுக்கு நான்கு முறை பொங்கலுக்கு மட்டுமே வந்தான்..

அவன் அப்பா கமலகண்ணன் இப்போது கொஞ்சம் சமாதானமாகி இருந்தார். அவன் சொல்லாமல் கொள்ளாமல் போனதை, எண்ணி மறுநாள், கடுங்கோபத்தில், நடு கூடத்தில்

நின்று, தலைக்கு தண்ணீர் ஊற்றி முழ்கினார். இளமாறனின் அம்மா காத்திருந்தாள். அவரின் கோபம் ஆற ஆறு மாதமானது..

"இப்போ என்ன பண்றானாம் அவன்? " ஒரு நாள் அவர் கேட்டபோது.. அவனின் கைபட, எழுதிய அத்தனை கதைகளையும்.. அவர் முன்னே கொண்டு வந்து போட்டாள்....

இளமாறனின் தந்தை.. எடுத்து ஒவ்வொன்றையும் வாசித்து முடிக்க பத்து நாளாயிற்று.. அதன் பின் இரண்டு நாள் கழித்து, தன் மனைவியை அழைத்தார்.

"நல்லாதாண்டி எம்மவன் கதை எழுதறான்.. ஒரு கூத்தாடிக்கு தெரியும்டி.. கதய பத்தி.. நாங்க எல்லாம் எப்பவோ எழுதினத கூத்து கட்டி பாட்டு கட்டுவோம்.. ஆனா இவன் ஒவ்வொரு கதையையும்.. சமுதாயத்துக்கு எழுதினதா இருக்கு.. எம்மவன் ஒரு நாள் ஜெயிப்பான்டி.." என்றார்.

"மாறா.. படப்பிடிப்பு முடிஞ்சதும் என் கார்ல ஏறு.. கொஞ்சம் பேசனும்.." இயக்குனர் பேச்சுக்கு எப்போதுமே மறுபேச்சு இல்லை.. அவனிடம். படப்பிடிப்பு முடிந்து பத்து நிமிடத்தில் இயக்குனர் கிளம்பிவிட்டார்.. அவரோடு வந்தவன், முன் பக்கமாய் உட்கார போனவனை தடுத்து,

"பின்னாடி என் கூட உட்கார்" என்றார்.. கூச்சத்தில், நெளிந்தவனை "வாடா" என உரிமையோடசொல்லி, "உடம்பை, ப்ரீயா விடுடா" என்று அவனை, பக்கத்திலே உட்கார வைத்தார். அவன் அவரோடு எப்போதுமே, அப்படி உட்கார்ந்ததில்லை. உள்ளே கூச்சம் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

மணிராஜா, "மாறா.. இன்னும் எத்தன நாள் படப்பிடிப்பு இருக்கு.." கேட்டார்.

மூனு நாள் சார்.."

"ம்ம்.. உனக்கு டைட்டில்ல.. தனிகார்டு போட சொல்லிட்டேன்.. இணை இயக்குனர்'னு.." அவர் சொன்ன போது, அவனால் பேச முடியல.. தொண்டை அடைத்தது. "உங்க பெருந்தன்மை சார்" என்றான் மெல்ல..

"அதெல்லாம் இல்லடா.. இது உன்படமா இருக்கும்டா.. என்னை எங்க வேலை செய்ய விட்ட.. ஆனா நான் என்ன நினைச்சேனோ அதெல்லாம் வந்ததுடா.. நான் நினைச்சதுக்கும் மேல கூட இருக்கும்.. அதனால தான்.. இணை இயக்குனர் பேரு" அவன் கண்கள் கலங்கியது.

அதை கண்ட மணிராஜா,

"டேய் மகிழ்ச்சியா இருடா. கூடவே இன்னொரு செய்தி.. 'சுபம் கம்பைன்ஸ்' ஒரு படம் பட்ஜெட்ல பண்ண, கேட்டிருக்காங்க.. நான் உன்னத்தான், சொல்லி இருக்கேன்.. நல்ல நிறுவனம்.. என்னோட முதல் படம் கூட அவங்களோடுதான்.. தெரியும்'ல" அவர் அவனிடம் கேட்ட போது, பேச முடியாது அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டு, 'ஆமாம்' என்பதை போல தலையை ஆட்டினான்.

"அதனால தான் நீ பண்ணுவேன்'னு சொல்லிட்டேன்.. அவங்களுக்கு ஓகே.. நாளைக்கு தயாரிப்பாளர போய் பாரு.. நல்லா பண்ணு.. என் பேர காப்பாத்தறியோ இல்லையோ, உன் பேர காப்பாத்திக்கோ.. ஏன்னா உன்னோட முதல் படம் இது.." என்றார். அவனுக்கு உள்ளுக்குள், மகிழ்ச்சி கூடவே பயமும் வந்தது. தன் டைரக்டரின் பெயரை காப்பாற்றனுமே என்ற பயம்.. அவரின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்டான்.

ஆறு மாதம் கழித்து, முதல் பிரதி தயாராகி, தன் இயக்குனரோடு உட்கார்ந்து, தன் படத்தை பார்த்து முடித்த நேரம்.. விளக்குகள் எரிய இயக்குநரோட முகத்தை பார்த்தவன்.. அவரின் பதிலுக்காக, பதட்டத்தோடு, அவரருகே நின்றிருந்தான். இயக்குனர் எழுந்து நின்றவர், அவனின் தோளின் மீது கை வைத்து,

"மாறா.. நீ ஜெயிச்சிட்டடா.. என் பேரையும் காப்பாத்தி உன்னையும் ஜெயிக்க வச்சுக்கிட்ட மாறா" அவனை ஆரத்தழுவி கொண்டார் டைரக்டர்.

படம் வெளியீடு அன்று இளமாறன், அரியலூர் திரையரங்கில், அம்மா அப்பாவோடும் தம்பியோடும்.. படம் பார்க்க அமர்ந்திருந்தான். படம் ஓட தொடங்கியதும்.. டைட்டிலில்.. "என் தந்தை பத்து தல ராவணன் கமலகண்ணனின் ஆசியோடு" என்ற வார்த்தையை கண்ட போது, கண் கலங்கியவாறு, தன் மகனின் கையை இறுக்கி பிடித்துக் கொண்டிருந்தார் கமலகண்ணன். அதில் "நீ ஜெயிச்சிட்ட மகனே" என்பதை சொல்லாமல் சொல்வதாக, உணர்ந்தான் இளமாறன்.

—

## இரவிச்சந்திரன்.



## வான் அழித்து வான் வரையும் கலை நேற்றை அழித்து இன்றை எழுதுகிறது

காமத்தின் முகவரியில் காதல் பெயர் மாற்றம்

நொடிகளின் கை விரலில் ஆயிரம்
பாவ கோலங்கள்

வடிக்கும்போதே உடையும் சிற்பம்
உடைந்த சிற்பத்தில் வடித்த பாவம்

கால மை தொட்டெழுதிய
வெளித்தாளில்
உயிர் உரைந்த கவிதைகள்

உறங்கினாள் விழிக்கிறது
அடம்பிடிக்கும் பிரபஞ்சம்
நீ விழித்தால் அருகில் தாலாட்டு
காதலை.

-----

ஒரு குளத்தில் மூழ்கி கிடக்கிறது கடல்.
ஒரு மீனில் சுருங்கிய திமிங்கலத்தை
கண்டு அஞ்சாதீர்.
மான் கொம்பு முட்டி புலி இறப்பது
புதுக் கதை.
தேனில் நஞ்சு இனிப்பதை மலைவாசி
குடிக்கிறான்.
தேரில் கடவுள்
ஊர்வலம் போகிறான் இறந்த முதியவன்.
ஆறு தண்டவாளத்தில் ஒரே ரயில்
திரைப்படம் நாளை முன்னோட்டம்.
கலவி முடிந்ததும் சொல்லுங்கள்
காதல் வர வேண்டும்.
புதிய காகிதத்தில் பழைய சோப்பு.
பழைய அழுக்கில் புதிய மனிதன்.
பூமி உடைந்தால் காப்பாற்று.

—

குமரன்விஜி.

தேநீர் அருந்தும்
ஒவ்வொருமுறையும்
அவள் நினைவுகள்
வராமல் இல்லை...

அப்படித்தான்
ஒரு மழை நாளில்
எனக்காக
வைத்திருந்ததை பார்த்தேன்
தேநீர்க்கோப்பையின் விளிம்பில்
கதகதப்பை ஆற்றிக்கொண்டிருந்தது
ஜன்னல் கண்ணாடியிலிருந்து
வழிந்தோடி வந்த
மழைத்துளியொன்று .

—

சாயிராம்,

தஞ்சாவூர்,
9443394625.

# சம்சாரம் அது மின்சாரம்

சாரம் சாரமாய்
கட்டிவைத்து என்னுள்
கொட்டி வைத்தாய்
மின்சாரத்தை...!

சம்சாரமாய் எண்ணினேன்
மின்சாரமாய் பாய்கிறாய்
என்னுள்ளே...!

ஜீரோ வாட்சாய்
இருந்த என்னில்
கொக்கி போட்டு
கட்டினாய் மின்கம்பியை...!

நீ பார்க்கும்போதெல்லாம்
என்னுள் பல மெகா வாட்ஸ்
பீறிட்டு எழுகிறது...!

உன் விழிகளென்ன
மின்சார கூடமோ?. உன்
பார்வையாலேவெளிச்சத்தை
வரவைக்கிறாய்எனக்குள்ளே...!

நீ தொடும்போதெல்லாம்
சாக்கடித்து சுருண்டு
விழுகிறேன் உன்னுள்ளே..!
தொட்டு தூக்கிவிடு
நானும் நிற்கிறேன்
மின்சார மரமாய்...!

திருவிழாவில் பவர்
கட்டான போது நீதானே
பவராய் வந்து நின்றாய்
என் கண்முன்னே...!

இப்பொழுதெல்லாம்
உடைந்த குண்டு பல்பாய்
நொறுங்கி கிடக்கிறாய்
ஒட்ட வைக்க முயற்சிக்கிறேன்
சேராமல் துண்டுகளாக
சிதறிக் கிடக்கிறாய்..!

என் மன வானில்
சிறகுகள் முளைத்து
பட்டாம் பூச்சியாய்
பறக்கிறேன் நீயும்
சிறகெடுத்து பறந்து வா
நிலவினில் ஒளியேற்ற....!

# சட்டைப் பை

உனக்குள்ளே துடிக்கும்
ஒருயிர்க்காக... நீ
வரும்போதெல்லாம்
சட்டையோடு சேர்ந்து
தடவிவிடுகிறேன்.

பயணிக்க தவறினாலும்
கடைவீதியில் பயணித்தாலும்
உன்னை கவனித்தே
செல்வேன்..

கிரீடமாய் அமர்ந்தாலும்
இதய சுவாசங்களை
நுகர்ந்து கொண்டு தான்

இருக்கிறாய்.

நீ நிரம்பி
வழியும்போதெல்லாம்
இதயம் பூத்து
குலுங்குகின்றன.

உன்னுள்ளே
சுவாமிப்படங்களும்
சில்லரை காசுகளும்
சிலபல நோட்டுகளும்
பேசிக்கொண்டுதான் கூடவே
வருகின்றன.

அழகான எழுதுகோல்
உன் கைவிரல்களோ...?
இதயம் சொல்லும்
வார்த்தைகளை
எழுதுகோலுக்குள்
நிரப்பி வைக்கிறாய்...

உன் காதுகள்
அறுபடும்போதெல்லாம்
இதயம் கூறும்வார்த்தைகளை
மறந்து விடுகிறாய்...
உன்காதில் விழும் சில்லரையாய் சிரிக்க
தவறமாட்டாய்....

அப்பாக்கள்
ஆசையாய் திணிக்கும்
நோட்டுகளை சிலநேரங்களில்
பத்திரப்படுத்துகிறாய்....
அம்மாக்கள் தரும்
முத்தங்களை உனக்குள்
சேகரிக்கிறாய்...

காலிப்பையாய்
தனிமைப்படும்போது
சில கேலியும்கிண்டலும்
எழுதப்படுகிறது உன்னுள்...
பைக்குள் விழும் வார்த்தைகளை
கவிழ்த்தே
முன்னேறுகிறாய்...

உன்னை வைத்தே
எடைபோடுகிறார்கள் சிலர்..
நோட்டுக்களை சுமக்கும்போது
உனக்கு சூடும்
பட்டங்கள் ஏராளம்...

மனித மூளையாய்
செயல்பட்டாலும்
தேசியக்கொடியை
தாங்கும்போதெல்லாம் நீ
காலரை தூக்கிவிட்டு தான்
செல்கிறாய்..

## வாழ்க்கை

பாதையின் தூரங்களை
கடக்கும் வரை
பயணங்கள் சிரமமாகின்றது

நொடிமுட்கள்
எறும்புகளாய் ஊர்ந்து
செல்லும்வரை நேரங்கள்
சிரமமாகின்றது

நடுக்கமின்றி ஓவியங்கள்

வரையும்வரை
கைகள் துடிப்புக்கு
ஆளாகின்றது.

இரவுகள் சிலிர்ப்போடு
தயக்கமின்றி ஒளிர்ப்பாகும்வரை நிலவும் அந்தரத்தில்
மிதந்து செல்கின்றது.

எழுதிய வாழ்க்கையை
எடுத்துச் செல்லும்வரை
இதயமும் சுமையாய்
கணத்துச் செல்கிறது.

வேண்டல்கள் கைவரப்பெறும்வரை
ஆலயங்களில் மணியோசை
ஒலித்துக் கொண்டு
இருக்கின்றது.

முதுகில் ஏறிய சுமைகள்
முனகிக்கொள்ளும்போது
முயற்சிகளும் முடங்கிகொள்கின்றது.

பூவினங்கள் தேனை
இழக்கும்வரை
செடியில் ஜொலிப்பாய்
மிளிர்கின்றது.

வாழப் பழகும் வரை
வாழ்க்கையும் வாழ
கற்றுக் கொடுக்கிறது.

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

# எரியட்டும் இனவாதம்

மின்வெட்டை தாங்கொணா மக்கட் கூட்டம்
பேருந்தை எரிக்க - அப்
பேருந்துத்தீ அரசின் இனவாத மூளையை சுட்டே புனிதமாக்கட்டும்

அன்றொரு நாள் தமிழர்மேல் இனவாத அரசு கட்டவிழ்த்த கொடூரத்தை தடுக்க
எரிந்தது இதேபோன்றொரு புரட்சி நெருப்பு அதுவே தமிழரின் இருப்பும் ஆனது

மக்களைப் பற்றிய அக்கறை இல்லாத அரசால் எத்துணை பயன் கண்டாய்
வாங்கிய கடன்களை எல்லாம் வங்கியில் சேமித்தே வாழும் அரசல்லவா இது

தீயினால் தான் சில புனித புரட்சிகள் இனிதே அரங்கேறி நிலைபெறுகின்றன
சாவினாலே பல சரித்திரம் படைத்தும் உணராத மாந்தரின் துடிப்பே இது

நாவினால் அடங்காத அரசை தீயினால் சுட்டெரிக்கும் மக்கட் சக்தியே
நீயும் எமக்காக கொஞ்சம் இரங்கி தெருவில் இறங்கியிருந்தால் இதுபோல் நடக்குமா

நீயே தேர்ந்தெடுத்தாய் நீயே தீயிலும் இடுகிறாய் இது இனவாதம் பூசிய அரசு
நீறு பூத்த தீயைப்போல் இருந்தாலும் இனவாத தீயை விட்டகலாத அரசு இது

ஆட்சியை கவிழ்த்தாலும் இராணுவ ஆட்சி உந்தன் குரல்வளை நசுக்கும்
பேசியே பார்த்தாலும் இழுஇழுவென இழுத்தே உன்னை நலிவடையச் செய்யும்

புத்தனின் போதனையை கற்ற நீயோ அதன்படி நடத்திட மறுக்கிறாய் - இனவாத
சித்தனிடம் நற்சிந்தனையை நினைத்தே உருகி உருகி வழிபடுவது சாத்தியமா..!

கறுப்பு யூலையில் தமிழர் உடமையும் உசிரையும் கருக்கிய தீயிது - அந்த
வெறுப்பை உமிழ்ந்தே எம்மை ஏறிமிதித்தே
நீவீர் செய்த கொடூரமதை மறக்க முடியுமா

எமக்கோ கந்தகத்தீயின் வாடையும் புரியும்
யூலைக் கலவரத்தீயின் வாடையும் தெரியும்
உனக்கோ எதுவும் புரியாமல் மூட்டுகிறாய் தீ
இப்போது சுவாசி முழுவதும் புரியும்

எரியட்டும் இனவாதம் தெளியட்டும் மனிதாபிமானம் - இனியும்
புரியாமல் போனால் உன்னை அந்த புத்தனாலும் காக்க முடியாது

இனவாதம் செய்யும் அரசியியலை புனித தீயே எரித்தே சாம்பலாக்குக
இனிமேல் இத்தகைய இழிசெயலை செய்வோர்
பரம்பரையையும் எரித்திடுக.



—

ஞா. ரேணுகாசன்,
சம்பூர், திருகோணமலை,
ஈழம்.

---

## நேயர் விருப்பம்

அப்போது தான்
பேசத் தொடங்கியிருக்கும்
குழந்தையிடம்
அதன் அப்பா
'அப்பா சொல்' என்கிறார்
அதன் அம்மா
'தங்கமே! அம்மா சொல்லுடி' என்கிறாள்
இப்படி அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள்
எல்லாம்
ஆளாளுக்கு அதனிடம்
ஒன்றைச் சொல்லச் சொல்லி
கேட்கிறார்கள்
பிரபலத்திடம்
வாழ்த்தொப்பம் கேட்பதைப் போல
பண்பலையில்
விருப்பப்பாடலை
ஒலிப்பரப்பச் சொல்லி
கேட்பதைப் போல

எந்தச் சொல்லைச்
சொல்லச் சொல்லிக் கேட்டாலும்
அந்த சொல்லின் சப்தத்தை
குழலைவிடவும் யாழைவிடவும் அழகாக
மிழற்றுகிறது மழலை
தேன் பிலிற்றும் மலராய்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்.

# நானும் நீயும்...

*நான் பூமி! நீயேன் நெகிழி?*

*நான் தென்றல்! நீயேன் புழுக்கம்?*

*நான் விடியல்! நீயேன் இருள்?*

*நான் மரம்! நீயேன் கோடரி?*

*நான் மொழி! நீயேன் மௌனம்?*

*நான் இசை! நீயேன் இடி?*

*நான் மழை! நீயேன் வறட்சி?*

*நான் மலர்! நீயேன் சூறாவளி?*

*நான் ஒளி! நீயேன் பயம்?*

*நான் வழி! நீயேன் நெருஞ்சில்?*

*நான் ஆழி! நீயேன் கழிவு?*

*நான் ஆகாயம்! நீயேன் கருந்துளை?*

*நான் விண்மீன்! நீயேன் எரிகல்?*

*நான் அருவி! நீயேன் புழுதி?*

*நான் வானம்பாடி! நீயேன் சுருக்குக்கயிறு*

*நான் விளைச்சல்! நீயேன் காட்டுத்தீ?*

*நான் பூமாலை! நீயேன் மூடமந்தி?*

*நான் தளிர்! நீயேன் சுடுவெயில்?*

*நான் பணம்! நீயேன் பதுக்கல்?*

*நான் வெண்புறா! நீயேன் பீரங்கி?*

*நான் படகு! நீயேன் புயல்?*

*நான் ஏணி! நீயேன் கரையான்?*

*நான் சிற்றுளி! நீயேன் சம்மட்டி?*

*நான் தங்கம்! நீயேன் திராவகம்?*

*நான் மகிழ்ச்சி! நீயேன் கலவரம்?*

*நான் திருத்தேர்! நீயேன் மதயானை?*

*நான் முத்தமிழ்! நீயேன் புரியா மந்திரம்?*

*நான் மெய்! நீயேன் புரட்டு?*

*நான் முன்னத்தி ஏர்! நீயேன்*
*முட்டுக்கட்டை?*

*நான் கூடு! நீயேன் நாகம்?*

*நான் விதை! நீயேன் பாறை?*

*நான் மனிதன்! நீயேன் மிருகம்?*

—

அமுதாராம்,
மன்னார்குடி.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.